பக்கங்கள்: 13

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2053 கார்த்திகை 13 செவ்வாய்க்கிழமை 29.11.2022 கதிர் 24

### இது ரகசியம் அல்ல!

‘வடக்கு ஆளுநர் ஜீவன் தியா கராஜாவுக்கு இது கெடுகாலம் போலும்’ என்று நேற்று முன்தினம் என் பத்தியை முடித்திருந்தேன். அது சரி போலத்தான் தோன்றுகிறது.

பாவம் மனிதர். தன்பாட்டில், தனக்கு அதிகாரம் ☞2



## மாவீரர் தின நிகழ்வுகளுக்கு இடமளித்தமை நல்லிணக்கத்திற்கு ரணில் காட்டிய சமிக்ஞை

### அதனை வரவேற்று நாடாளுமன்றில் செல்வம் அறிவிப்பு

மாவீரர் தின நிகழ்வுகளுக்கு நெருக்கடிகள் கொடுக்காதுஅவற்றைநடத்திச்செல்லஇடமளித்தமை நல்லிணக்கத்திற்காக இலங்கை ஜனாதிபதி வழங்கிய சமிக்ஞை எனக் குறிப்பிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், அந்த நிலைப்பாட்டைத் தாங்கள் வரவேற்கின்றனர் எனவும் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று உரையாற்றிய சமயமமே இதனை அவர் குறிப்பிட்டார்.

சில இடங்களில் தடங்கல்கள் ஏற்படுத்தப்பட்ட ☞2



# ‘தெளிவான சட்டத்தை விளங்காத ஆளுநர்!’

## ஈ.பி.டி.பி. தவராசா காட்டம்




(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், நவம்பர் 29

தெளிவான சட்டத்தை விளங்காத வடபகுதி ஆளுநர் என வடக்கு மாகாண சபையின் முன்னாள் எதிர்க் கட்சித் தலைவரும் ஈ.பி.டி.பி. பிரமுகருமான சி.தவராசா நேற்று வடக்கு ஆளுநர் ஜீவன் தியாகராஜாவைக் காட்டமாக விமர்சித்தார். ☞2



## 24 மீனவர்கள் 5 படகுகளுடன் நேற்றுக் கைது



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், நவ.29

நெடுந்தீவுக் கடற்பரப்பிற்குள் அத்துமீறி உள் நுழைந்த இந்திய மீனவர்களின் 5 படகுகளை கடற்படையினர் ☞2

## ஆளுநரின் அறிக்கை குறித்து சர்ச்சை

யாழ்ப்பாணம்,நவ.29

“சட்ட திட்டம் எனக்கும் தெரியும்; யாரும் கற்பிக்க வர வேண்டாம்; அதிகார மிடுக்குடன் ஆளுநர் அறிவிப்பு” - என்றதலைப்பில்நேற்றுவெளியான ஆளுநர் ஜீவன் தியாகராஜாவின் அறிக்கை தொடர்பில் நேற்றிரவு சில வட்டாரங்கள் சந்தேகம், சர்ச்சைகள் கிளப்பியுள்ளன.

ஆளுநர் இந்தியாவில் நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டிருக்கையில் அவருக்கு மிக நெருக்கமான ஊடகவியலாளர்களுடன் தொடர்புடைய இணைய ஊடகங்களில் பலவற்றில் ஆளுநரின் இந்த பதிலடி அறிக்கை நேற்று நண்பகல் வெளியாகி இருந்தது.

ஆளுநர் அலுவலகம் வெளியிட்ட அறிக்கை என்றே அந்தச் செய்திகளில் தெரிவிக்கப்பட்டது.

அந்த அறிக்கையின் விவரம் நேற்று மாலை காலைக்கதிர் இதழில் தலைப்புச் செய்தியாகப் பிரசுரமானது.

அதன் பின்னர் நேற்றிரவு சில உயர் மட்டங்களில் இருந்து அந்த அறிக்கையை ஆளுநர் ☞2



## காணி ஆக்கிரமிப்புக்கு அளவீடு; காரைநகரில் மக்கள் தடுத்தனர்!

காரைநகர் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட ஜே/44 கிராம சேவகர் பிரிவில் உள்ள, 44 குடும்பங்களுக்குச் சொந்தமான 11 ஏக்கர் காணிகளை இராணுவத்திற்கு அளவிடுவதற்கு அப்பகுதி மக்கள் நேற்று ☞2

## இளைஞரை போட்டுத் தாக்கிய படை, பொலிஸ்

போக்குவரத்து பொலிஸாரால் வழிமறிக்கப்பட்டு, அவமரியாதைக்கும் அவலத்துக்கும் உள்ளாக்கப்பட்ட இருவர் குறித்து, தலையிட்டு நியாயம் கேட்ட வழிப்போக்கர் ஒருவர் மிக மோசமாகத் தாக்கப்பட்டார். ☞2

## தைப்பொங்கலுடன் 5 மாதங்களுக்கு யாழ். கொழும்பு ரயில் சேவை ‘அவுட்’!

பழுதடைந்த ரயில் பாதையைச் சீரமைக்கும் வரை ஜனவரி 15 ஆம் திகதி முதல் 5 ☞10

## வியட்நாமில் உள்ள அகதிகளில் 85 பேர் நாடு திரும்ப இணக்கம்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், நவ.29

கனடா செல்வதற்காக சட்டவிரோதமாக ☞2

## இலங்கைக்குக் கடத்தப்படவிருந்த 365 கிலோ கொக்ஹேயின் சிக்கியது?

### மண்டபம் வேதாளை கடற்கரையில் வைத்து

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், நவ.29

இந்தியாவின் தமிழ்நாடு மாநிலத்தில் உள்ள இராமேஸ்வம் மாவட்டத்தில் மண்டபம் பொலிஸ் நிலைய எல்லைக்குட்பட்ட வேதாளை கடற்கரை சாலையில் ☞10



## மக்களின் விருப்பத்திற்கு மாறாகச் சீனாவுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செய்ய வேண்டாம்

### யாழ். பல்கலை மாணவர் ஒன்றியம் அரசுக்கு வேண்டுகோள்

மக்களின் விருப்பத்திற்கு மாறாக சீனாவுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் வேண்டாம் என இலங்கை அரசுக்கு யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:-

யாழ் பல்கலைக்கழக மாணவர்களாகிய நாங்கள், சீன அரசாங்கத்தினால் சீன விவசாயப் பல்கலைக்கழகத்திற்கும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம், ☞10

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருக்கின்றது. யார் தட்டிக் கேட்கப்போகின்றார்கள் என நினைத்துக் கொண்டு, மாகாணத்துக்கான நியதிச் சட்டங்களை யாக்கப் போய், பல தரப்புகளிடமும் வாங்கி கட்டும் நிலைமை.

நேற்று மாலை அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த விவகாரத்தை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பிரஸ்தாபித்திருக்கின்றார்.

அவர் விடயத்தை கூறத் தொடங்கியதுமே ஜனாதிபதியும் பிரதமரும் விழுந்து விழுந்து சிரித்தனராம். அவரை வழிமறித்தார் ஜனாதிபதி.

"அவருக்கு (ஆளுநருக்கு) சட்டவாக்கல் அதிகாரத்தை யார் அளித்தார்களாம்?" - என்று கேட்ட ஜனாதிபதி, "நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவிடம் விடயத்தை ஒப்படையுங்கள், அவர் தவறைத் திருத்த உரிய நடவடிக்கை எடுப்பார்" என்று வழிகாட்டல் உத்தரவு வழங்கினார்.

நேற்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ பிரசன்னமாகி இருக்கவில்லை. அதனால் விடயம் இன்று அவரிடம் ஒப்படைக்கப் படக் கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அவர் அடுத்து வரும் நாள்களில் இந்த விவகாரத்தை நேர்சீராக்க நடவடிக்கை எடுப்பார் என எதிர்பார்க்கலாம்.

இதற்கிடையில் -

'சட்ட திட்டம் எனக்குத் தெரியும்; யாரும் கற்பிக்க வர வேண்டாம்!' - என்று சாரப்பட ஆளுநர் ஜீவன் தியாகராஜா பெயரில் நேற்று வெளியான அறிக்கை விவரம் நேற்று முன்னிரவில் ஜனாதிபதியின் செயலாளருக்குச் சுருக்கமாக மொழி பெயர்த்து எடுத்துரைக்கப்பட்டது.

அவரும் சிரித்துக் கொண்டே "ஏன், அவர் இவ்வளவு நாளும் நீதித்துறையிலா பணிபுரிந்தார், அவருக்கு சட்ட திட்டம் இவ்வளவுக்குத் தெரிவதற்கு?" - என்று நையாண்டி பாணியில் வினவினார் என சம்பந்தப்பட்ட வட்டாரம் தெரிவித்தது.

இவற்றுக்குப் பின்னரே, நேற்று ஆளுநர் ஜீவன் தியாகராஜாவின் பெயரில் வெளியான அந்த அறிக்கை அவரால் வெளியிடப்படவில்லை என்ற சாரபட ஒரு கதை கட்டவிழ்ந்தது.

என்ன, ஏது என்று தேடிப்பார்த்தேன்.

இந்தியாவில் இருக்கும் ஆளுநர் ஒரு பதில் அறிக்கையைத் தயார் செய்தார். அதை இந்தியாவிலிருந்து தனது அலுவலகத்துக்கு அவர் 'டிக்டேக்' செய்தார். தயாரான அறிக்கை அவரது இறுதி அங்கீகாரத்துக்கு முன்னரே அவரது அலுவலகத்தால் வெளியே விடப்பட்டு விட்டது என்ற சமாதானம் இப்போது ஆளுநர் தரப்பில் கூறப்படுகின்றது.

ஆளுநர் சம்பந்தப்பட்ட ஒரு வாட்ஸ் அப் குரூப்பிலும் அது உடன் தரவேற்றப் பட்டது. அதன் பின்தான் அது ஊடகங்களில் பரபரப்பாக வெளியானது.

ஆளுநர் தரப்பில் இப்படி சமாதானம் கூறுவதுதான் உண்மையில் நிகழ்ந்ததா அல்லது அந்த அறிக்கை தொடர்பில் கொழும்பின் பிரதிபலிப்புகளை அடுத்து, அப்படி 'சமாளிபிகேஷன்' கதை இப்படி அவிழ்த்து விடப்படுகின்றதா என்பது ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம்.

எது, எப்படி என்றாலும், தன்பாட்டில் நியதிச் சட்டங்களை வர்த்தமானியில் அறிவித்த அவரின் நடவடிக்கை நிச்சயம் இந்த வார இறுதி அளவில் நீதிமன்றத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் தடையீட்டு எழுத்தாணை (writ of certiorari) தாக்கல் செய்வார் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் எனத் தெரிகின்றது. அவர் நாளை கொழும்பிலிருந்து யாழ்வரும்போது பெரும்பாலும் வழக்குத் தாக்கல் செய்வதற்கான ஆவணங்களை எடுத்து வருவார் என்றும், இங்கு மனுதாரரான வடக்கு மாகாண அவைத் தலைவர் சீ.வி.கே.சிவஞானம் ஒப்பமிட்டதும் அந்த ஆவணங்கள் கொழும்புக்கு எடுத்துச் செல்லப்பட்டு, உடன் மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் என்றும் தெரிகிறது.

விடயத்தை நீதியமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு போய், உரிய நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சர் டக்ளஸுக்கு ஜனாதிபதி வழிகாட்டி இருக்கின்றமையால் -

அதன் அடிப்படையில் நீதி அமைச்சர் தலையிட்டு மேற்படி நியதிச் சட்டங்களுக்கான வர்த்தமானி அறிவித்தலை வாபஸ் பெறும் ஏற்பாடு எதையும் விரைந்து செய்வாராயின், சுமந்திரன் வழக்குத் தாக்கல் செய்ய வேண்டிய தேவை வராது.

இல்லையேல் வழக்கில் ஆளுநரின் முடிவு சந்தி சிரிக்கும் விவகாரமாக மாறுவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

**- மின்னல் -**

## மாவீரர் தின நிகழ்வு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போதும், பெரியளவில் நெருக்கடி கொடுக்கப்படவில்லை என்றார் அவர். இதற்காக அவர் ஜனாதிபதிக்கு அந்த உரையில் நன்றி கூறினார்.

ஊடகவியலாளர்களுக்கு உரிய உதவித்திட்டங்களை அரசு முன்னெடுக்க வேண்டும் என வலியுறுத்திய அவர், ஊடகவியலாளர்களும், ஊடக நிறுவனங்களும் எதிர்கொள்ளும் நெருக்கடிகளையும் விவரித்தார்.

## தெளிவான சட்டத்தை .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

"வடக்கு மாகாணத்திற்கு உட்பட்ட இரு நியதிச் சட்டங்களை ஆளுநர் தம்பாட்டில் உருவாக்கியமை தொடர்பாக ஆளுநர் அதிகாரம் அற்ற செயலைச் செய்கின்றார் எனப் பகிரங்கமாகத் தெரிவித்திருந்தேன். இதற்கு பதில் கருத்தாக ஆளுநர் அரசியல் அமைப்பின் '154 சி' பிரிவைக் குறிப்பிடுகின்றார். அந்த 154 சி தெளிவாகத்தான் குறிப்பிடுகின்றது. அதனைக் கூட வாசித்து அறிய முடியாத ஒருவர்தான் வடக்கு மாகாணத்திற்கு ஆளுநராக உள்ளார் என்பதனை நினைக்கும்போது வேதனையாகவுள்ளது.

அந்தப் பிரிவில் நிறைவேற்றுச் செயற்பாடு (நிறைவேற்று அதிகாரம்) மற்றும் (நியதி) சட்டவாக்கும் அதிகாரம் பற்றியும் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது.

அந்த நிறைவேற்றுச் செயற்பாட்டிற்கும் சட்டவாக்கம் மேற்கொள்ளும் செயற்பாட்டிற்கும் வித்தியாசம் தெரியாத ஆளுநராக இவர் விளக்கம் கூற முற்படுகின்றார். நிறைவேற்றுச் செயற்பாட்டு அதிகாரம் ஜனாதிபதிக்கு மட்டுமே உரியது. இதனை விளங்காதுள்ளார்.

அரசமைப்பின்படி -

எக்கருமங்கள் தொடர்பில் நியதிச் சட்டங்களை ஆக்குவதற்கு மாகாண சபை தத்துவமுடையதாக உள்ளதோ, அக் கருமங்களை உள்ளடக்குவதான நிறைவேற்றுத் தத்துவமானது அம் மாகாணத்திற்கான ஆளுநரினால் ஒன்றில் நேரடியாகவோ அல்லது அமைச்சர்கள் சபையை சேர்ந்த அமைச்சர்கள் மூலமாகவோ அல்லது அவருக்கு கீழ் அமைந்த அலுவலர்கள் மூலமாகவோ என '154 எவ்' எனும் உறுப்புரிமைக்கு அமைய பிரயோகிக்கப்படுத்த வேண்டும் என்பதே ஆகும்.

அதாவது, மாகாண சபைக்கு எந்த விடயாங்களில் நியதிச் சட்டங்களை ஆக்குவதற்கு தத்துவமுள்ளதோ அந்த விடயங்களில் ஆளுநருக்கு ஜனாதிபதியால் கையளிக்கப்பட்ட நிறைவேற்று அதிகாரம் உண்டு. அவ்வளவுதான்.

எனவே இவை தொடர்பில் வித்தியாசம் தெரியாது, மாகாண சபை முறைமையையே கேலிக்கூத்தாக்க வேண்டாம் எனக் கோருகிறேன்.

இலங்கையில் சர்வ நிறைவேற்று அதிகாரம் கொண்டவர் ஜனாதிபதி எனக் கூறினாலும், அந்த ஜனாதிபதிக்கும் கூட ஒரு வரியில் கூட சட்டம் நிறைவேற்றும் அதிகாரம் கிடையாது. இது தெளிவானது.

இவ்வாறு இருக்க ஜனாதிபதி நியமிக்கும் ஒரு போடுதடிதான் ஆளுநர். அவருக்கு சட்டம் இயற்றும் ஒரு சிறு துளி அதிகாரம் கூடக் கிடையாது எனபதனை அறியாதவர்களை ஆளுநர் பதவியில் இருத்தியதன் விளைவுதான் இது.

இதனால் இவ்வாறு சட்டத்தை இயற்றுகின்றேன் என மாகாண சபை முறைமையைக் கேலிக்கூத்தாக்காமல் இருப்பதே மேலானது. மீண்டும் உரைக்கின்றேன். நியதிச் சட்டம் ஒன்றை உருவாக்கும் அதிகாரம் எந்த மாகாண ஆளுநருக்கும் கிடையாது.

அவ்வாறு நான் உரைப்பது தவறு எனில் எந்த நீதிமன்றிலும் சந்திக்கவும் தயாராகவே இருக்கின்றேன்.

இவ்விடயத்தில் நீதி நிலைநாட்டப்பட காலம் எடுக்காது. தரப்புகளுக்கு நோட்டீஸ் அனுப்பி முதல் தவணையுடன் தீர்ப்பு வந்தாலும் வரும். ஏனென்றால் இவ்விடயத்தில் சர்ச்சை இல்லை. சட்டமும், அதன் விளக்கமும் மிகத் தெளிவானவை; வெளிப்படையானவை; சந்தேகத்துக்கோ, இரு கருத்துத் தரும் மயக்கத்துக்கோ, வித்தியாசமான - மாற்றான - பொருள் கோடலுக்கோ இடமில்லாதவை. ஆளுநர்தான் தம்மிஷ்டப்படி இல்லாத அர்த்தத்தில் பொருள் கொள்கின்றார். நீதிமன்றம் அவருக்கு உரியதைச் சரியாகப் போதிக்கும். புரிய வைக்கும். அதில் சந்தேகம் இல்லை. - என்றார்.

## ஆளுநரின் அறிக்கை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடவில்லை என்கிறார் என்று தகவல் வந்தது.

இதை அடுத்து -

மேற்படி ஆளுநருக்கு நெருக்கமான ஊடக வட்டாரங்களுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது -

ஆங்கிலத்தில் அறிக்கை ஆளுநர் அலுவலகத்தில் இருந்து வந்தது என்றும், இதோ பிரதியை அனுப்பி வைக்கிறோம் என்றும் பதிலளிக்கப்பட்டது.

ஆனால் அந்தப் பதிலுக்கு பின்னர் அந்த ஊடக வட்டாரம் தொலைபேசியை அணைத்துவிட்டு ஒளித்து விட்டது.

இதற்கிடையில் காலைக்கதிரின் மாலைப் பதிப்பில் வெளியான மேற்படி ஆளுநரின் அறிக்கை பற்றிய செய்தியின் ஆங்கில மொழிபெயர்ப்பு கொழும்பில் ஜனாதிபதியின் செயலாளருக்கு சுருக்கமாக வழங்கப்பட்டது எனத் தகவல் ஒன்று தெரிய வந்தது.

இதே சமயம் -

யாழ்ப்பாணத்திலிருந்து பிறிதொரு செய்தியாளர் இந்தியாவில் இருக்கும் ஆளுநர் ஜீவன் தியாகராஜாவுக்கு 'வாட்ஸ் அப்' பில் குறுஞ்செய்தி ஒன்றை அனுப்பினார்.

"உங்களின் இன்றைய அறிக்கை எமக்கு கிடைக்கவில்லை" என்றும் -

"இன்று உங்களது அறிக்கை என வெளியானசெய்தி உங்களது உத்தியோக பூர்வ அறிக்கை இல்லையா?" என்றும் -

இரு செய்திகளை அவர் அனுப்பியிருந்தார்.

அதற்கு சுமார் 20 நிமிடங்கள் கழித்து "No. Not an official statement' ('இல்லை. அது உத்தியோகபூர்வ அறிக்கையல்ல') என்று குறும் பதில் அனுப்பி இருக்கிறார் ஆளுநர்.

அது தம்முடைய அறிக்கையே அல்ல என்றோ, தாம் அப்படி ஓர் அறிக்கையை விடவில்லை என்றோ ஆளுநர் மறுக்கவில்லை.

அது உத்தியோகபூர்வ அறிக்கை அல்ல என்றுதான் அவர் கூற வருகின்றார் எனின், அது ஆளுநர் என்ற உத்தியோக பூர்வ முறையில் அல்லாமல் வெறும் ஜீவன் தியாகராஜா என்ற முறையில் வெளியானதா என்ற சந்தேகம் எழுகிறது.

எது, எப்படி என்றாலும் ஆரம்பத்தில் இந்த அறிக்கையை அம்பலப்படுத்திய - ஆளுநருக்கு மிக நெருக்கமான - ஆங்கிலத்தில் அறிக்கையின் பிரதியை வைத் திருப்பதாக உறுதிப்படுத்திய - நேற்றிரவுடன் ஒளித்து விட்ட - அந்தச் செய்தி வட்டாரம் உண்மையை வெளிக் கொணர்ந்தால்தான் விடயம் அம்பலமாகும்.

அறிக்கையின் காரம் கொழும்பு வரைச் சென்று 'பூமராங்' ஆகத் திரும்பி விட்டமையால் 'ஜாகா' வாங்கும் வேலைக்கு சம்பந்தப்பட்ட செய்தி வட்டாரமும் சேர்ந்து துணை போனதா என்பது இன்றளவில் பெரும்பாலும் தெரியவரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## 24 மீனவர்கள் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுக் கைப்பற்றியுள்ளனர். 24மீனவர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தமிழகத்தில் இருந்து நேற்றுக் காலை புறப்பட்ட மீனவர்களின் ட்ரோலர் படகுகளையே இவ்வாறு கடற்படையினர் பிடித்துள்ளனர்.

பிடிக்கப்பட்ட படகுகள் நேற்றிரவு மயிலிட்டித் துறைமுகத்திற்குக் கொண்டு வரப் பட்டுள்ளன.

## இளைஞரை போட்டுத் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தச் சம்பவம் நேற்று முன்னிரவு மானிப்பாய் ஆலடிச் சந்திப் பகுதியில் இடம்பெற்றது.

அவ்வழியே வந்த விசேட அதிரடிப் படையினர் மற்றும் இராணுவத்தினர் சேர்ந்து அந்த இளைஞனைக் கும்மி தள்ளினர். நையப்புடைத்தனர். பொதுமக்கள் திரண்டு பார்த்திருக்க இந்த அராஜகம் அரங்கேறியது.

சொண்டு பிளந்து, முகத்தில் காயங்களுடன், பாலமுரளி நிரோஷன் (வயது 28) என்ற இந்த இளைஞர் நேற்றிரவு யாழ் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப் பட்டிருந்தார் என்று தெரியவந்தது.

## காணி ஆக்கிரமிப்புக்கு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்று திரண்டு பெரும் எதிர்ப்பை வெளியிட்டனர். காணியை அளவிடுவதற்கு வந்த நில அளவைத் திணைக்களத்தினர் மக்களின் எதிர்ப்பையடுத்து அங்கிருந்து திரும்பிச் சென்றனர்.

இது தொடர்பில் அப்பகுதி மக்கள் தெரிவிக்கையில் -

"நாங்கள் சொந்த காணிகள் இல்லாமல் வாடகை வீடுகளில் இருந்து மழையிலும் தண்ணீரிலும் அல்லல்படுகின்றோம். எங்களது நிலைமையைக் கருத்தில் கொள்ளாது இராணுவத்தினருக்குக் காணி அளவிடுவதற்கு முயற்சிக்கின்றனர். இதனை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

அண்மையில் வடக்கு ஆளுநர் செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில், மக்களது காணிகளை மக்களுக்கே வழங்குவார் என ஆளுநர் குறிப்பிட்டிருந்தார்.

"நில அளவைத் திணைக்களத்தினர் இன்றையதினமும் காணி அளவீட்டிற்கு வருகை தந்திருக்கின்றனர்.

காரைநகர் பிரதேச செயலர் தமக்கு காணி அளவிடுமாறு அறிவித்தல் வழங்கிய நிலையிலேயே தாங்கள் காணி அளவிடுவதற்கு வருகை தந்தனர் என நில அளவை திணைக்களத்தினர் தெரிவித்தனர்.

"இந்தக் காணி சுவீகரிப்பு நடவடிக்கை தொடருமானால் எங்களது போராட்டங்களும் தொடரும்" - என மக்கள் தெரிவிக்கின்றனர். இந்த போராட்டத்தில் காணியின் உரிமையாளர்கள், தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர், சமூகமட்ட அமைப்புகள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## வியட்நாமில் உள்ள .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அழைத்துச் செல்லப்பட்டு வியட்நாமில் மீட்கப்பட்ட இலங்கையர்களில் 85 பேர் நாடு திரும்ப ஒப்புக்கொண்டுள்ளனர் என வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

இலங்கையில் இருந்து கடல்வழியாக கனடா செல்வதற்காகச் சட்டவிரோதமாகப் படகு மூலம் அழைத்துச் செல்லப்பட்ட சமயம் படகில் ஏற்றப்பட்ட கோளாறு காரணமாக மீட்கப்பட்ட 303 பேர் வியட்நாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களில் 85 பேர் நாடு திரும்ப இணங்கியுள்ளனர் எனவும் அவர்களை நாட்டிற்கு அழைத்துவருவதற்கு இலங்கை அரசு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் நேற்று நாடாளுமன்றில் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

303 இலங்கையர்கள் மீட்கப்பட்டு வியட்நாம் முகாம் ஒன்றில் தங்கவைக்கப் பட்டுள்ளனர். அவர்களில் இருவர் துப்புரவுத் திரவாகம் அருந்தித் தற்கொலை செய்ய முயன்றதில் ஒருவர் உயிரிழந்தார் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்
076 443 8622
kalaikkathiradvt@gmail.com

காலைக்கதிர் Kalaikkathir

# 24 புதிய சுற்றுலா தளங்கள் நாட்டில் கண்டறியப்பட்டன!

## வேலைத்திட்டத்தை தயாரிக்க நடவடிக்கை

உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகளுக்குபயனளிக்கும்அவசர வேலைத்திட்டத்தை தயாரிப்பதற்கு சுற்றுலா அமைச்சு மற்றும் ஏனைய அரச நிறுவனங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

சுற்றுலாத் துறையை அபிவிருத்தி செய்யும் வகையில் நாட்டின் கடற்கரையோரம் 24 புதிய சுற்றுலாத் தளங்கள் கண்டறியப்பட்டுள்ளன. நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் கீழ் உள்ள கடலோரப் பாதுகாப்பு மற்றும் கடற்கரை வளங்கள் முகாமைத்துவத் திணைக்களத்தால் இந்த புதிய சுற்றுலா தளங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

ஆற்றங்கரை, புத்தளம் குடா தீவுகள், குடவ, வைக்கால, நீர்கொழும்பு குடா, கபுன்கொட, பிரிதிபுர, கொக்கல குடா, சீத கல்ல, ரெகவ குடா, லுனம குடா, மலால லேவாய, கிரிந்த, குனுகலே கடற்கரை, எலிபெண்ட்ரொக், சலதீவ்தீவு, தம்பலகமுவ விரிகுடா, கவர்னர் ஒப்பிஸ், உப்புவெளி, சம்பல்தீவு கடற்கரை, சாம்பல்தீவு கடற்கரை, அரியமல்ல கடற்கரை, நாயாறு கடற்கரை, நந்திக்கடல் கடற்கரை, சாந்த குளம் கடற்கரை ஆகியவை புதிதாக அடையாளப்படுத்தப்பட்ட சுற்றுலாத் தளங்களாகும்.

இந்நிலையில், நாட்டின் கரையோர சுற்றாடலைப் பாதுகாத்து நாட்டைச் சூழவுள்ள கரையோரத்தை உரிய முறையில் அபிவிருத்தி செய்வதன் மூலம் எமது நாடு எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடிகளுக்குத் தீர்வு காண முடியும் என அமைச்சர் பிரசன்ன ரணதுங்க மேலும் அங்கு சுட்டிக்காட்டினார்.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் வரவு – செலவுத் திட்ட விவாதம் தொடர்பாக அதிகாரிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் பிரசன்ன ரணதுங்க இதனைக் குறிப்பிட்டார்.

இந்நாட்டின் கரையோரத்தின் இயற்கையான அமைவிடத்துக்கு ஏற்ப, காற்றாலை மின்திட்டங்கள், சூரியசக்தி உற்பத்தி பூங்காக்கள் போன்ற புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திட்டங்களை மேற்கொள்ள வாய்ப்பு உள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

எனவே, நாட்டின் கடற்கரையோரங்களில் சுற்றுலாத்துறையை மேலும் மேம்படுத்துவதுடன், கடற்கரையோரங்களில் ஏனைய அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பதற்கான சாத்தியக்கூறுகளைக் கண்டறியுமாறும் அமைச்சர் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

இவ்வாறான திட்டங்களுக்கு தனியார் துறையைப் போன்று அரச துறையையும் இணைத்து அவசர திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டுமெனவும் அவர் சுட்டிக்காட்டினார். பொருளாதார வளங்கள் நிறைந்த இந் நாட்டின் கடற்கரை 1620 கி.மீ. நீளமுடையதாகும். எனவே இந்நாட்டின் கரையோரப் பகுதியைப் பாதுகாத்து, கரையோர வளங்களை அடிப்படையாகக் கொண்ட பாதுகாப்பான மற்றும் நிலையான அபிவிருத்தியில் நாம் உடனடியாகக் கவனம் செலுத்த வேண்டும் எனவும் அவர் சுட்டிக் காட்டினார்.

கடலோர வலயத்தையும் அதனுடன் தொடர்புடைய வளங்களையும் பாதுகாத்து எதிர்கால சந்ததியினருக்கு உரிமையாக்கும் நோக்கத்துடன் சூழலியல் முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளைப் பாதுகாக்கப்பட்ட பிரதேசங்களாக அறிவிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன்படி கிழக்கு பிராந்தியத்தில் உள்ள பானம மணல்மேடுகளும் புத்தளத்தில் உள்ள சண்டிக்காடு மணல்மேடுகளும் பாதுகாக்கப்பட்ட பிரதேசங்களாக வர்த்தமானியில் வெளியிடுவதற்கு ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இந்த வருட இறுதிக்குள் அறுகம்பே கடற்கரையோரத்தில் உள்ள உல்லை மணல்மேடைச் சூழவுள்ள பகுதியை விசேட பாதிப்புக்குள்ளான பிரதேசமாக வனவளத் திணைக்களத்துடன் இணைந்து பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் தெரிவித்தார்.

மேலும், ஜனவரி 2020 முதல் டிசெம்பர் 2021 வரை, 24 கடலோர பாதுகாப்பு திட்டங்களும், 43 அவசரகால கடலோர பாதுகாப்பு திட்டங்களும் செயற்படுத்தப் பட்டுள்ளன.

இந்தக் கடலோரப் பாதுகாப்புத் திட்டங்களால் 10.7 கிலோமீற்றர் கடற்கரைப் பகுதியைப் பாதுகாக்க முடிந்தது.

மேலும், இந்த ஆண்டு கடலோர அரிப்பைத் தடுக்க 11 கடலோரப் பாதுகாப்புத் திட்டங்களும், 12 இதர திட்டங்களும் திட்டமிடப்பட்டுள்ளன. இவற்றில் 5 திட்டங்கள் நிறைவடைந்துள்ளதுடன் மேலும் 18 திட்டங்கள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இப்போதும் கூட தலைமன்னார், தோடுவாவ, பிடிப்பன, மொரட்டுவ, கலிடோ, அம்பலாங்கொடை, மிரிஸ்ஸ, நிந்தவூர் மற்றும் திருக்கோவில் ஆகிய இடங்களில் கரையோரப் பாதுகாப்புத் திட்டங்கள் ஏற்கனவே முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இது தவிர இரணைவில, நிந்தவூர், பேருவளை, பயாகல, காத்தான்குடி மற்றும் சம்பூர் ஆகிய பகுதிகளில் சுமார் 10 அவசரகால கரையோர பாதுகாப்புத் திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

# விகிதாசார முறையில் தேர்தல் நடத்த சட்டமூலம் கொண்டுவர அரசு தயாரா?

## லக்ஷ்மன் கிரியெல்ல கேள்வி



உள்ளூராட்சி மற்றும் மாகாணசபை தேர்தல்களை விகிதாசார முறையில் நடத்துவதற்கு புதிய சட்டமூலம் கொண்டு வந்தால் நாங்கள் அதற்கு பூரண ஆதரவை வழங்குவதற்குத் தயார்.

அரசாங்கம் சட்டமூலம் வரத் தயாரா? என எதிர்க்கட்சியின் பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல சபையில் கேள்வி எழுப்பினார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற 2023 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத்திட்டத்தில் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு மற்றும் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சு விடயதானங்களுக்கான நிதி ஒதுக்கீடுகள் குழு நிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் –

மாகாணசபை தேர்தலை நடத்துவதற்காக இருக்கும் தடைகளை நீக்கி, புதிய சட்டமூலம் ஒன்றை கொண்டுவருவதற்கான மூன்றில் இரண்டு பெரும்பான்மை கடந்த காலத்தில் அரசாங்கத்துக்கு இருந்தது. ஆனால், அதனை அரசாங்கம் செய்யவில்லை. தற்போது அந்த பெரும்பான்மை இல்லை. அதனால் மாகாணசபை தேர்தலை விகிதாசார முறையில் நடத்துவதற்கு அரசாங்கம் புதிய சட்டமூலம் ஒன்றைக் கொண்டுவந்தால் அதற்கு பூரண ஆதரவை வழங்குவதற்கு நாங்கள் தயார்.

ஆனால் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை மார்ச் மாதத்துக்கு முன்னர் நடத்த வேண்டும். அதனை பிற்போட்டால் நாங்கள் நீதிமன்றம் செல்வோம். அத்துடன் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் சட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களில் தற்போது அதிகம் பேசப்படுவது அதன் உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகம் என்பதாகும்.

ஆனால் இந்த திருத்தத்துக்கு அன்று ஆளும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அனைவரும் வாக்களித்தார்கள். யாரும் எதிர்க்கவில்லை.

8 ஆயிரமாக இருக்கும் உறுப்பினர்களை 4 ஆயிரமாக குறைக்க வேண்டும் என்பதுதான் பிரச்சினை என்றால் அதனை ஒரு சரத்தின் ஊடாக விகிதாசார முறைக்கு மாற்ற முடியும். அதன் மூலம் தானாகவே 4 ஆயிரமாக மாறும். அதனை நாங்கள் செய்வோம். அதற்கு நாங்கள் ஆதரவு. ஆனால் அரசாங்கத்துக்கு தேவையாக இருப்பது தேர்தலை பிற்போடுவதாகும். – என்றார்.

இதற்கு பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர் ஜானக்க வக்குபுர பதிலளிக்கையில், தேர்தலை விகிதாசார முறையில் நடத்துவதற்கு முடியுமான புதிய சட்டமூலம் ஒன்றைக் கொண்டுவருவோம். வரவு – செலவுத் திட்ட விவாதம் முடிந்ததுடன் அந்த சட்டமூலத்தை நாடாளுமன்றத்துக்குக் கொண்டுவருவோம். – என்றார்.

# தேர்தலில் வெற்றிபெற்ற ஹிட்லர் முகவரி இல்லாமல் இருக்கின்றார்!

## டிலான் கிண்டல்



வெளிநாட்டுக்கு தப்பிச் சென்று அங்கிருந்து இராஜினாமா கடிதத்தைக் கையளிக்க வேண்டிய நிலை தேர்தலில் வெற்றி பெற்ற ஹிட்லருக்கு ஏற்பட்டதாக டிலான் பெரேரா தெரிவித்தார்.

அவர் தற்போது முகவரியின்றி தேர்தலில் தோல்வியடைந்த ஹிட்லராக இருக்கிறார் என பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போதே டிலான் பெரேரா இதனைத் தெரிவித்துள்ளார்.

'இருப்பினும், ஹிட்லர் எப்படி இறந்தார் என்பதை இவர்கள் அனைவரும் அறிய விரும்புகிறார்கள். அடால்ஃப் ஹிட்லர் தன்னைத்தானே சுட்டுக் கொண்டு இறந்தார். – என்று அவர் கூறினார்.

# இலங்கைக்கான பிரதி இந்திய உயர் ஸ்தானிகர் மத்திய மாகாண ஆளுநர் லலித் யு கமகே சந்திப்பு



இலங்கைக்கான பிரதி இந்திய உயர் ஸ்தானிகர் உயர் விந்தோத் கே.ஜேக்கப் மற்றும் மத்திய மாகாண ஆளுநர் லலித் யு கமகே ஆகியோருக்கிடையில் சிநேக பூர்வ கலந்துரையாடல் ஒன்று கண்டியில் உள்ள ஆளுநர் அலுவலகத்தில் இடம் பெற்றது. இதன் போது, இரு நாடுகளுக்கு மிடையிலான இராஜதந்திர உறவுகளின் தொடர்பாகக் கலந்துரையாடப் பட்டது. மத்திய மாகாணத்தில் பல்வேறு இடங்களிலும் மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்தி செயற்திட்டங்கள் தொடர்பிலான பல முக்கிய விடயங்களும் கலந்துரையாடப் பட்டன என மத்திய மாகாண ஆளுநர் காரியாலயம் தெரிவித்தது. அத்துடன், இந்த சிநேக பூர்வ கலந்துரையாடலின் பின்னர் இரு நாடுகளினதும் உறவை வெளிப்படுத்தும் வகையில் நினைவுச் சின்னங்கள் பரிமாறப் பட்டன. கண்டியிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகர் டாக்டர் எஸ். ஆதிரா மற்றும் பிரத்தியேக செயலாளர் தீப்பிகா ஹேரத் ஆகியோரும் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

# இங்கினியாகலயில் கடத்தப்பட்ட 13 வயதான சிறுமி கண்டுபிடிப்பு!

## ஒன்றாக தங்கியிருந்தவர் கைது

13 வயது சிறுமி ஒருவர் காணாமல் போயிருந்த நிலையில் அவரும் அவருடன் தங்கியிருந்தார் எனக் கூறப்படும் நபரும் இரத்தினபுரி – லெல்லோபிட்டிய பகுதியில் வீடு ஒன்றில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து சிறுமியை தமது பொறுப்பில் எடுத்துக் கொண்ட இரத்தினபுரி பொலிஸார் அவருடன் தங்கியிருந்த சந்தேக நபரான இளைஞரைக் கைது செய்துள்ளனர்.

பின்னர் இருவரும் மேலதிக விசாரணைகளுக்காக இங்கினியாகல பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

13 வயது சிறுமி ஒருவர் தனது பாதுகாப்பில் இருந்தபோது கடத்தப்பட்டார் எனத்தாயொருவர் இங்கினியாகல பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தார்.

இந்த முறைப்பாடு தொடர்பில் மேற்கொண்ட விசாரணைகளின் அடிப்படையிலேயே இவர்கள் இருவரும் பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## தேசப்பற்றாளர்களின் குரல்

**மக்களின் விருப்பத்திற்கு மாறாக சீனாவுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்ய வேண்டாம் என இலங்கை அரசிடம் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் வேண்டுகோள் விடுத்திருக்கின்றது.**

**வடக்கு, கிழக்குக்குள் காலூன்ற – நுழைய – சீனா சமய சந்தர்ப்பம் பார்த்து, பொருத்தமான ஓட்டைகளைத் துருவித் தேட முயல்கையில், அதற்கான துளைகளை இடமளிக்காமல் – விட்டு வைக்காமல் – அவற்றை மூடி மறைத்து, நிரப்பிக் கொண்டிருக்கிறது யாழ்ப்பாண சமூகம்.**

**மீனவர் பிரச்சினை, கடல் அட்டை உற்பத்தி, மீனவருக்கு ஊக்குவிப்பு என்ற பெயர்களில் சீனாவின் காய் நகர்த்தல்கள் இருக்கின்றன. அதில் கொழும்பின் இணக்கமும் சேர்ந்து விளையாடுகின்றது.**

**இந்த வகையில் அடுத்த முயற்சியாக உயர்கல்வித்துறை ஊடான நுழைவுக்கு சீனா வியூகம் வகுக்கின்றது.**

**போர் நலிவில் சிக்குண்டு தவிக்கின்றது தமிழினம் என்பது உண்மைதான். மூன்று தசாப்த கால போரவலங்களால் பேரழிவுகளைச் சந்தித்து நிற்கும் தமிழர்களின் தாயகமான வடக்கும் கிழக்கும், அந்தப் பின்னடைவுகளில் இருந்து மீண்டெழ, சர்வதேச ஆதரவையும் உதவியும் நாடி நிற்கின்றது என்பதும் உண்மைதான்.**

**ஆனால், அதற்காக அந்தப் போர் நலிவைப் பயன்படுத்தி – உதவி, நன்கொடை, கடன் வழங்கல் என்ற பெயர்களில் – எந்தத் துறை ஊடாகவும் தீய சக்திகள் தமது தாயகத்துக்குள் நுழைந்து, காலூன்றிவிட அனுமதிக்கக்கூடாது என்பதில் தமிழர் தாயகம் சற்று விழிப்பாகவும் அவதானமாகவும்தான் இருக்கின்றது; இருக்க வேண்டும்.**

**அதன் பிரதிபலிப்பே யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்களின் இந்த அறிக்கை. அவர்களின் அந்த அறச் சீற்றத்தில் இரண்டு முக்கிய அம்சங்கள் பொதிந்துள்ளன.**

**ஒன்று – தமிழர் தாயகம் பற்றியது. மற்றையது – ஒட்டுமொத்த இலங்கைத் தீவு தொடர்பானது.**

**தமிழர் தேசம் மீது இடம்பெற்ற இனப்படுகொலை கொடூரத்துக்கும் இனவழிப்புக்கும் நேரடியாகத் துணை போனது சீனா. அது மாத்திரமல்ல, அந்தக் கொடூரங்களுக்கு சர்வதேச ரீதியில் நீதி கிடைப்பதை முழு அளவில் தடுத்து நிற்கும் நாடும் சீனா. அந்த வகையில் தமிழர் தேசத்துக்கு சீனா முழு விரோதி நாடு என்ற கருத்தியலை மண்ணின் மன்றமான யாழ்ப்பாண பல்கலைக்கழகமும் அதன் மாணவர்களும் பிரதிபலித்து நிற்கின்றமை தவறன்று. நியாயமானதும் கூட.**

**அடுத்து – சர்வதேசக் கடன் பொறியில் இலங்கையை மாட்ட வைத்த சீனா, அதிலிருந்து இலங்கையை மீள விடாமல், தன் ஆதிக்கத்தை இலங்கை மீது செலுத்த மேற்கொண்டு வரும் சதி நாச நகர்வுகள். அவை அப்பட்டமானவை.**

**இந்த வகையில் பார்த்தால் தமிழர் தேசத்தினதும், இலங்கைத் தீவினதும் தேசப்பற்றாளர்களின் குரலே யாழ் பல்கலைக்கழக மாணவர்களின் இந்த அறிவிப்பு.**

## ஆட்சியாளர்கள் தமது அதிகாரத்தை தக்கவைத்துக்கொள்ளும் நோக்கில் செயற்பட்டால் மக்கள் போராட்டம் மேலும் வலுக்கும்!

### சமிந்த விஜயசிறி எச்சரிக்கை



ஆட்சியாளர்கள் தமது அதிகாரத்தைத் தக்கவைத்துக் கொள்ளும் நோக்கில் மக்களின் அபிலாஷைக்கு எதிராக செயற்பட்டால் மக்கள் போராட்டம் பலமாக வலுவடையும். தேர்தலில் படுதோல்வி அடைவதை அறிந்தே அரசாங்கம் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை பிற்போட அதிக கவனம் செலுத்தியுள்ளது என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜயசிறி தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற 2023 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தில் பொதுநிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி, விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரத் துறை அமைச்சு ஆகியவற்றுக்கான நிதி ஒதுக்கீடுகள் தொடர்பான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

நாடு வங்குரோத்தது நிலை அடைந்துவிட்டது,ஆகவே தேர்தலை நடத்த நிதி இல்லை என ஆளும் தரப்பினர் குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

தேர்தலுக்குச் செல்லும் திறன் இல்லாத காரணத்தால் அச்சமடைந்து அரசாங்கம் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை தேர்தல் முறைமை ஊடாக பிற்போட அவதானம் செலுத்தியுள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், பொதுஜன பெரமுனவின் அரச தலைவர்களுக்கும் மக்கள் மத்தியில் நல்ல நிலைப்பாடு கிடையாது. ராஜபக்ஷர்களை மக்கள் வெறுத்த காரணத்தால்தான் பொதுஜன பெரமுன எதிர்வாதியான ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவைத் தமது தலைவராகத் தெரிவு செய்துகொண்டார்கள்.

தமக்கான அரசாங்கத்தைத் தெரிவு செய்துகொள்ள மக்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட வேண்டும். மக்கள் ஆதரவு உள்ள அரசாங்கத்துக்குதான் சர்வதேசம் ஒத்துழைப்பு வழங்கும். பல்வேறு தரப்பினரை ஒன்றிணைத்து பொருத்தப்பட்டுள்ள இந்த அரசாங்கத்துக்கு சர்வதேச அங்கீகாரம் கிடையாது.

நாட்டு மக்களின் அபிலாஷைக்கு மதிப்பளித்து அரசாங்கம் செயற்பட வேண்டும்.அதிகாரத்தை தக்கவைத்துக் கொள்ள மக்களை நெருக்கடிக்குள்ளாக்கும் வகையில் மக்களின் அபிலாஷைக்கு எதிராக செயற்பட்டால் மக்கள் போராட்டம் மேலும் வலுவடையும் என்பதை அரச தலைவர்கள் விளங்கிக் கொள்ளவேண்டும். – என்றார்.

## அரச பலத்தைக்கொண்டு போராட்டங்களை அடக்க முடியுமென அரசு எண்ணக் கூடாது

### இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் எச்சரிக்கை

இளைஞர் பிரதிநிதித்துவத்தை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு மாத்திரம் வரையறை செய்து, அரசாங்கம் இளைஞர்களை ஏமாற்ற முயற்சிக்கின்றது.

அத்துடன் உரிமைகளுக்காகப் போராடும் இளைஞர்களை அரச அதிகாரங்களைக் கொண்டு அடக்கிவிடலாம் என நினைத்தால் அது ஏமாற்றமாகும் என ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர் இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற 2023 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத்திட்டத்தில் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு மற்றும் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சு விடயதானங்களுக்கான நிதி ஒதுக்கீடுகள் குழு நிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் –

அரசாங்கம் மேற்கொண்டுவரும் ஒருசில தீர்மானங்களால் இளைஞர்கள் விரக்தியடைந்திருக்கின்றனர். அதனால் இளைஞர்கள் வீதிக்கிறங்கி போராட ஆரம்பித்துள்ளனர்.

இவ்வாறு போராட்டத்தில் ஈடுபடும் இளைஞர்களை இராணுவ, பொலிஸ் பலத்தினாலும் பயங்கரவாத தடைச்சட்டத்தைப் பயன்படுத்தியும் அடக்க முடியும் என அரசாங்கம் நினைத்தால் அது ஏமாற்றமாகும்.

இளைஞர்களின் போராட்டத்தை அரச பலத்தால் அடக்க முற்பட்டதால் சர்வதேச நாடுகளில் ஏற்பட்ட விளைவுகளை நாங்கள் நினைவில்கொள்ளவேண்டும்.

அத்துடன் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகத் தெரிவாவதற்கு முன்னர் இளைஞர் போராட்டத்துக்கு வழங்கிய முக்கியத்துவம், அவர் ஜனாதிபதி பதவி ஏற்று சில நிமிடங்களிலேயே அந்த நிலை மாறியதை நாங்கள் கண்டோம்.

இதுதான் எமது நாட்டின் நிலை. இளைஞர்களின் போராட்டத்தை அடக்குவதற்குப் பதிலாக அவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கே அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

மேலும் நாடாளுமன்றத்துக்கு இளைஞர் பிரதிநிதித்துவத்தை 25 வீதத்தால் அதிகக்கும் தனிநபர் பிரேரணை ஒன்றை நான் இந்த சபைக்கு கடந்த ஜூலை மாதம் கொண்டு வந்தேன்.ஆனால் தற்போது எனது பிரேரணையில் ஒரு பகுதியை நீக்கிவிட்டு, இளைஞர் பிரதிநிதித்துவத்தை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு வரையறுக்க முயற்சிப்பதாகத் தெரியவருகின்றது. அதற்கு இடமளிக்கக் கூடாது. – என்றார்.

இதன்போது எழுந்த எதிர்க்கட்சியின் பிரதமகொறடா, இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் இளைஞர்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்கும் தனிநபர் பிரேரணையை கடந்த ஜூலை மாதம் கொண்டுவந்தார்.

ஆனால் இளைஞர் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பது தொடர்பில் ஆளும் கட்சி உறுப்பினர் ஒருவர் இந்த மாதம் கொண்டுவந்த பிரேரணையை அரசாங்கம் அமைச்சரவைக்குச் சமர்ப்பித்து, ஊடக பிரசாரம் மேற்கொண்டு வருகின்றது. இவ்வாறான கீழ்த்தரமான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ளக்கூடாது. – என்றார்.

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை - 2022



"ஒரு தேசமாக நிலைத்திருக்க, ஒரு மாநிலமாக வளர, மக்களாக வாழ எங்களிடம் மரங்கள் இருக்க வேண்டும்."

- தியோடர் ரூஸ்வெல்ற் -
(அமெரிக்காவின் 26ஆவது ஜனாதிபதி)

காலைக்கதிர்
Kalaikkathir

# இந்திய அமைதிப் படையினருக்கு எதிரான யுத்தத்தில் குணரட்ணம் ஈடுபட்டமை தவறா?

## முன்னிலை சோசலிசக் கட்சி கேள்வி




ஆக்கிரமிப்பு இராணுவம் எனக் கருதப்படும் இந்திய அமைதிப்படையினருக்கு எதிரான மக்கள் யுத்தத்தில் குமார் குணரட்ணம் ஈடுபட்டமை தவறா என முன்னிலை சோசலிச கட்சி கேள்வி எழுப்பியுள்ளது

முன்னிலை சோசலிச கட்சியின் தலைவர் குமார் குணரட்ணம் ஆஸ்திரேலிய பிரஜாவுரிமையை கைவிட்டு விட்டார் என அவரது கட்சி தெரிவித்துள்ளது.

குமார் குணரட்ணம் இரட்டை பிரஜாவுரிமையை கொண்டுள்ளார் இந்திய அமைதிப்படையினரை கொலை செய்த குற்றச்சாட்டு அவருக்கு எதிராக உள்ளது என சமீபத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இதற்கு பதிலளித்துள்ள முன்னிலை சோசலிச கட்சி, குமார் குணரட்ணம் இலங்கை பிரஜாவுரிமையை மாத்திரம் கொண்டுள்ளார் எனத் தெரிவித்துள்ளது.

ஆக்கிரமிப்பு இராணுவம் எனக் கருதப்படும் இந்திய அமைதிப்படையினருக்கு எதிரான மக்கள் யுத்தத்தில் குமார் குணரட்ணம் ஈடுபட்டமை தவறா எனவும் முன்னிலை சோசலிச கட்சி கேள்வி எழுப்பியுள்ளது.

செய்தியாளர் மாநாட்டில் இது தொடர்பாகக் கருத்து தெரிவித்துள்ள முன்னிலை சோசலிச கட்சியின் கல்வி செயலாளர் புபுது ஜெயகொட, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குமார் குணரட்ணம் இரட்டை பிரஜாவுரிமை கொண்டவர் எனத் தெரிவித்துள்ளார் குமார் குணரட்ணவை பஸில் ராஜபக்ஷவுடன் ஒப்பிட்டுள்ளார் என சுட்டிக்காட்டியுள்ளார்.

குமார் குணரட்ண தற்போது அமெரிக்க பிரஜாவுரிமையைக் கொண்டிருக்கவில்லை. ஆஸ்திரேலிய பிரஜாவுரிமையை அவர் கைவிட்டு இலங்கை பிரஜாவுரிமையை ஏற்றுக்கொண்ட தருணத்தில் பிரதமராக பதவி வகித்தவர் ரணில் விக்கிரமசிங்க எனவும் புபுது ஜெயகொட சுட்டிக்காட்டியுள்ளார்.

வேண்டுமென்றே ஜனாதிபதி நாடாளுமன்றத்தில் பிழையான அறிக்கையை விடுத்துள்ளார் எனவும் அவர் குற்றம்சாட்டியுள்ளார்.

குமார் குணரட்ணம் ஏன் தனது அடையாளத்தை மறைத்துக்கொண்டு ஆஸ்திரேலியா செல்லவேண்டிய நிலையேற்பட்டது - ஜனாதிபதியாக பதவி வகித்தவேளை மஹிந்த ராஜபக்ஷ அவரை கொலை செய்ய முற்பட்டார். இதன் காரணமாகவே கட்சி அவரை வெளிநாட்டுக்கு அனுப்பத் தீர்மானித்தது. - என தெரிவித்துள்ள புபுது ஜெயகொட, குமார் குணரட்ணம் நாடு திரும்பி அரசியலில் ஈடுபடுவதற்கு தீர்மானித்தவேளை ரணில் விக்கிரமசிங்க என்ன செய்தார் ஒருவருடத்துக்கு அவரை சிறையில் அடைத்தார் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

அவரை விடுதலை செய்யவேண்டும் என கோரி ஒரு வருட காலத்திற்கு மேல் எங்கள் கட்சியை சேர்ந்தவர்களும் மனித உரிமை செயற்பாட்டாளர்களும் பொது மக்களும் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

குமார் குணரட்ணத்துக்கு இலங்கை பிரஜாவுரிமை வழங்கப்பட்டவேளை பிரதமராக பதவி வகித்த ரணில் விக்கிரமசிங்க குடிவரவு குடியகல்வு திணைக்களம் மற்றும் ஆள்பதிவு திணைக்களத்துக்கு பொறுப்பாக இருந்தார். இதன் காரணமாக குமார் குணரட்ணம் இரட்டை பிரஜாவுரிமைக்குரியவர் இல்லை என்பது நன்கு தெரியும் எனவும் தெரிவித்துள்ளார்.

இந்திய அமைதிப்படையை இலக்குவைத்து குமார் குணரட்ணம் குண்டுகளை வைத்தார் என ஜனாதிபதி குற்றம்சாட்டியுள்ளார். இந்திய அமைதிப்படை என்பது ஆக்கிரமிப்பு இராணுவம் இலங்கை மக்கள் அதற்கு எதிராக போரிட்டனர் எனவும் புபுதுஜெயகொட தெரிவித்துள்ளார்.

குமார் குணரட்ணம் மக்கள் மத்தியிலிருந்தார் இராணுவம் இலங்கை மீது படையெடுக்கும் போது நாங்கள் எதனையும் செய்யக் கூடாதா? அந்தவேளை விக்கிரமசிங்க இடம்பெற்றிருந்த ஜே.ஆர் ஜெயவர்த்தன அரசாங்கம் இந்தியாவிடம் மண்டியிட்டது. மக்கள் போரிட்டனர். அந்த போராட்டத்தை ஒழுங்கமைப்பதில் குணரட்ணம் பங்களிப்பு வழங்கினார். அதில் என்ன தவறு எனவும் புபுதுஜெயகொட கேள்வி எழுப்பியுள்ளார்.

# தலையில் தாக்கப்பட்ட காயங்களுடன் மஹாவெலவில் பெண்ணின் சடலம் மீட்பு!

மஹாவெல, மானின்கமுவ பிரதேசத்தில் பெண் ஒருவர் சந்தேகத்துக்கிடமான முறையில் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த பெண் வீட்டில் இருந்து காணாமல் போயுள்ளார் என மஹவெல பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து வீட்டைச் சோதனையிட்ட போதே பெண்ணின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு சடலமாக மீட்கப்பட்ட பெண் பல்லேபொல, மானின்கமுவ பிரதேசத்தில் வசித்த 55 வயதுடையவராவார்.

சடலம் தொடர்பில் நீதிவான் விசாரணைகள் இடம்பெற்றபோது, தலையில் கூரிய ஆயுதத்தால் தாக்கிய காயங்கள் காணப்பட்டமையால் இது கொலைச் சம்பவம் எனத் தெரியவந்துள்ளது.

உயிரிழந்தவர் தனது சகோதரன் வீட்டில் வசித்து வந்த திருமணமாகாத பெண்ணாவார்.

சடலம் மாத்தளை வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன் சந்தேக நபர்கள் இதுவரை அடையாளம் காணப்படவில்லை. சந்தேக நபர்களைக் கைது செய்வதற்கான மேலதிக விசாரணைகளை மஹாவெல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



காலைக்கதிர் Kalaikkathir

# விமான நிலையக் கட்டணத்தை பஸில் ராஜபக்ஷ செலுத்தினார்!

## பொதுஜன பெரமுன விளக்கம்

கொழும்பு, நவ. 29

தனிப்பட்ட பயணத்தை மேற்கொண்டு வெளிநாடு சென்றிருந்த முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ அண்மையில் நாடு திரும்பிய போது, விமான நிலைய செயற்பாடுகளுக்கான கட்டணங்கள் விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் நிறுவனத்தால் செலுத்தப்பட்டன வெளியாகியுள்ள செய்திகள் உண்மைக்கு புறம்பானவை என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் விளக்கமளித்து பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசத்தால் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

தனிப்பட்ட பயணத்தை மேற்கொண்டு வெளிநாடு சென்றிருந்த ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகர் முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ அண்மையில் நாடு திரும்பினார்.

அவர் நாடு திரும்பியதற்குரிய விமான நிலைய செயற்பாடுகள் தொடர்பில் போலியான தகவல்கள் வெளியிடப்படுகின்றமை அவதானிக்கப்பட்டுள்ளது.

பஸில் ராஜபக்ஷ சட்ட ரீதியாகவே விமான நிலைய வளாகத்தைப் பயன்படுத்தியிருக்கின்றார். சிவில் விமான சேவைகள் நிறுவனத்தின் ஆவணங்களுக்கமைய இது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

பஸில் ராஜபக்ஷ தனது மனைவியுடன் விமான நிலையத்தின் முக்கிய பிரமுகர்கள் நுழைவாயிலைப் பயன்படுத்தியுள்ளதோடு, அதற்காக விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் நிறுவனத்திற்கு 400 டொலர் கட்டணத்தையும் செலுத்தியுள்ளார்.

விமான நிலைத்துக்குச் செல்லும் போதும் அங்கிருந்து வெளியேறும் போதும் எந்தவொரு நபருக்கும் கட்டணத்தை செலுத்தி, முக்கிய பிரமுகர்கள் நுழைவாயிலைப் பயன்படுத்த முடியும் என்பது அனைவரும் அறிந்த விடயமாகும்.

எனவே அவர் கட்டணத்தை செலுத்தி அந்த நுழைவாயிலைப் பயன்படுத்தியமை எந்தவகையிலும் சட்டத்துக்கு முரணான செயல் அல்ல.

அத்தோடு அவரை வரவேற்பதற்காக சென்ற சிலரும் இதே முறைமையின் கீழ் முக்கிய பிரமுகர்கள் நுழைவாயிலைப் பயன்படுத்தியுள்ளதோடு, அவர்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தேநீர் விருந்துக்கும் பஸில் ராஜபக்ஷவின் தரப்பினர் உரிய கட்டணத்தை செலுத்தியுள்ளனர்.

இந்த கட்டணத்தை விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் நிறுவனம் செலுத்தியுள்ளதாக வெளியாகியுள்ள செய்திகள் உண்மைக்குப் புறம்பானவையாகும்.

பஸில் ராஜபக்ஷ விமான நிலைய வளாகத்தைப் பயன்படுத்திமையால் அரசாங்கத்துக்கோ அல்லது வேறு நிறுவனங்களுக்கோ எவ்வித நஷ்டமும் ஏற்படவில்லை. - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சிறைச்சாலைக் கைதிகளின் எண்ணிக்கை இருமடங்கானது!

## அந்தத் திணைக்களம் தெரிவிப்பு



நாடளாவிய ரீதியில் உள்ள சிறைச்சாலைகளில் அதிகபட்சமாக 13 ஆயிரத்து 200 கைதிகளை அடைத்து வைக்கும் திறன் உள்ளது. ஆனால் தற்போது 26 ஆயிரம் கைதிகள் சிறைச்சாலைகளில் இருக்கின்றனர் என மேலதிக ஆணையாளர் பொது ஊடகப் பேச்சாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்தார்.

அதன்படி, இவர்களில் 13 ஆயிரத்து 300 கைதிகள் போதைப்பொருள் தொடர்பான குற்றச்சாட்டின் காரணமாக சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். மேலும் சிறைகளில் உள்ள ஏனைய கைதிகளின் எண்ணிக்கை 10 ஆயிரம் மற்றும் சந்தேக நபர்களின் எண்ணிக்கை 16 ஆயிரம் எனக் காணப்படுகிறது.

இந்த வருடத்தின் ஆரம்பத்துடன் நாட்டில் உள்ள ஒவ்வொரு சிறைச்சாலைகளிலும் சிறைச்சாலைகளுக்குள் பிரவேசிக்கும் கைதிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

இந்நிலையில் மரண தண்டனை விதிக்கப்பட்ட கைதிகளின் எண்ணிக்கை 1,177 ஆகும். இவர்களுள் மரண தண்டனை உறுதி செய்யப்பட்ட கைதிகளின் எண்ணிக்கையில் 12 பெண்கள் உட்பட 642 பேர் உள்ளடங்குகின்றனர். மேலும் மரண தண்டனை உறுதிப்படுத்தப்பட்டு மேல்முறையீடுகளைச் சமர்ப்பித்த 15 பெண்கள் உட்பட 535 பேர் காணப்படுகிறார்கள். ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட சுமார் 500 பேரும் சிறைகளில் உள்ளனர். - என்றார்.

# தமிழ் மக்கள் அவசியம்பார்க்க வேண்டிய ‘தாய்நிலம்’ நில அபகரிப்பு ஆவண படம்

யாழ்ப்பாணம், நவ. 29

தமிழ் மக்களின் தாயகமான வடக்கு - கிழக்கில் காலம் காலமாக அரசாங்கங்கள் மேற்கொண்டுவரும் நில அபகரிப்பை ஆதாரபூர்வமாக எடுத்துக்காட்டும் ‘தாய்நிலம்’ நில அபகரிப்பு - இலங்கை வாழ் தமிழ் மக்களின் உண்மையான பெருந்தொற்று (ThaaiNilam: Land Grabbing - The Real Pandemic for the Tamils in Sri Lanka) என்ற ஆவணப் படம் அனைவரும் அவசியமாகப் பார்க்கவேண்டிய ஒன்று.


தமிழ் மக்களின் பூர்வீக காணிகள் அபகரிக்கப்படுவது பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் இந்த ஆவணப் படம் வெளியிடப்பட்டுள்ளது.

வரலாற்று ரீதியாக தமிழ் மக்களின் காணிகள் எவ்வாறு அபகரிக்கப்பட்டன என்பது பற்றியும் தமிழர் தாயகத்தின் இன்றைய நிலைமை எவ்வாறு இருக்கின்றது என்பது பற்றியும் இந்த ஆவணப்படம் விளக்குகின்றது. தமிழ் மக்கள் அனைவரும் கட்டாயமாக பார்க்க வேண்டிய ஓர் ஆவண படம் இதுவாகும்.

இந்த ஆவண படம் ஆங்கிலத்தில் தயாரிக்கப்பட்டிருக்கின்றபோதிலும் தமிழ் மொழியில் கணிசமான தகவல்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்று யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.



காலைக்கதிர் Kalaikkathir



# கிளிநொச்சியில்

# ஐஸ்வர்யம் பெருவிருந்து மண்டபம்

# Ishwaryam Banquet Hall



Tel:- 021 228 3701, 071 7354308

Whatsapp:- 071 7736 4308

No.315, Kandy Road,
Kilinochchi



- அன்பான வரவேற்பு
- தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
- இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
- இந்தியன் உணவுவகைகள்
- Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.

சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்

# ISHWARYAM BANQUET HALL

## BANQUET MEALS HALL





## FULL OPTION

### MAIN DIHES

Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style

### DESSERT

| | |
|---|---|
| ice Cream Cup | - 60/= |
| Fruit Salad | - 60/= |
| I ce Cream & Fruit Salad | - 100/= |
| Cream Caramel | - 120/= |

SPECIAL MENU PACKAGE


### BEVERAGES

| | |
|---|---|
| jUICE 200 ml | - 70/= |
| Milk Drink | - 70/= |
| Cocacola M | - 70/= |
| Pepsi M | - 70/= |
| Swchpees Tin | - 250/= |
| Coca Cola Tin | - 250/= |

காலைக்கதிர்
Kalaikkathir

# விரைவில் மூடு விழாக் காணும் வடக்கின் வைத்தியசாலைகள்!

தெல்லியூர் சி.ஹரிகரன்



நாட்டின் முக்கியமான இரு துறைகளில் சுகாதாரமும் கல்வியும் பிரதானமானவை. அதிலும் சுகாதாரத்துறை மனித நேயத்துடன் உயிர்காக்குப் பெரும் பணியை ஆற்றுகின்ற முக்கியத்துவம் வாய்ந்த ஒரு துறையாகும்.


வடக்கு மாகாணத்தில் மாகாணத்துக்குக் கீழ் இயங்குகின்ற வைத்தியசாலைகளில் கதிரியக்கவியலாளர்கள், அவர்களுக்குரிய மேலதிக கொடுப்பனவுகள் சரியானமுறையில் வழங்கப்படாதமையால் தொழிற்சங்க நடவடிக்கை இடம்பெறுகின்றது. இதற்குப் பின்னணியில் பல அரசியல் காய்நகர்வுகள் இடம்பெறுகின்றனவோ என்றும் சந்தேகம் கொள்ள வைக்கின்றது.

இதன் காரணமாக யாழ்.மாவட்டத்தில் வலிகாமத்தில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையிலும் வடமராட்சியில் மந்திகை ஆதார வைத்தியசாலையிலும், சாவகச்சேரியில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையிலும் தீவகத்தில் ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலையிலும் இலகுவாக சிகிச்சைகளைப் பெற்ற நோயாளிகள், ஒரு கதிரியக்கப் பிரதியைப் பெறுவதற்காக பணம், நேரம் என்பவற்றை விரயமாக்கி யாழ். போதனா வைத்தியசாலைக்கு செல்லவேண்டிய துர்ப்பாக்கிய நிலைமை காணப்படுகின்றது.

ஏன், யாழ்.மாவட்டத்தைவிட, கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, வவுனியா மாவட்டப் பொது வைத்தியசாலைகளிலும்கூட இதே நிலைமையால் அங்குள்ள நோயாளர்களும் யாழ்.போதனா வைத்தியசாலையை நோக்கி பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் அதிக பணம் செலவுசெய்து வரவேண்டிய நிலைமை காணப்படுகின்றது.

உண்மை நிலைமையை அப்பட்டமாகச் சொல்லப்போனால் வடக்கு மாகாணத்தின் சுகாதாரத்துறையை ஒட்டுமொத்தமாகவே இழுத்துமூடுகின்ற நிலைமை காணப்படுகின்றது என்றே சொல்லலாம். கதிரியக்கம் என்பது சுகாதாரத்துறையில் மிகவும் முக்கியமான ஒன்று. ஒருவர் விபத்தில் காயமடைந்தாலோ அல்லது ஏதாவது நாட்பட்ட நோவினால் வைத்தியசாலைக்கு வந்தாலோ நிமோனியா போன்ற உயிர் அச்சுறுத்தும் நோய்கள் ஏற்பட்டாலோ கதிரியக்கப் பிரதியை வைத்தே எவ்வாறான சிகிச்சையை வழங்குவது அல்லது சத்திர சிகிச்சையை அளிப்பதா என்பதை வைத்திய நிபுணர்கள் தீர்மானிப்பார்கள். இந்தக் கதிரியக்கம் இயங்காததால் தற்போது வடக்கு மாகாண முழு மக்களுக்கும் சேவையாற்றுகின்ற ஒரு நிலையமாக மத்திய அரசின் நிர்வாகத்தின் கீழ் உள்ள யாழ்.போதனா வைத்தியசாலையே காணப்படுகின்றது என்றால், வடக்கு ஆளுநர், பிரதம செயலாளர் மற்றும் சுகாதாரத்துறைசார் நிர்வாக அதிகாரிகளின் அசண்டையீனத்தால் வடக்கின் சுகாதாரத்துறைக்கு மூடுவிழா விரைவில் நடத்தப்பட இருக்கின்றது என்றே கூறவேண்டும்.

வன்னி மாவட்டத்தில் சில வைத்தியசாலைகளில் ஒரு கதிரியக்கவியலாளரே கடமையாற்றுகின்றார். கதிரியக்க அச்சுறுத்தல் கொண்ட தொழிலாக இது காணப்படுவதால் அவர்களின் கடமைநாள்கள் ஏனைய அரச தொழில் போன்றல்லாது 4 நாள்கள் மட்டுமே காணப்படுகின்றது. ஏனைய மூன்று நாள்கள் அதைவிட அரச விடுமுறை நாள்களில் அவர்களுக்கு மேலதிகக் கொடுப்பனவு வழங்கப்பட்டாக வேண்டும். ஒரு கதிரியக்கவியலாளர் கடமையாற்றுகின்ற ஒரு வைத்தியசாலையில் அவர் 4 நாள்கள் மட்டுமே கடமையாற்றினால் மேலதிகக் கொடுப்பனவுவழங்கப்படாததால் அச்சுறுத்தல் மிக்க இந்தத் தொழிலை அவரால் ஏனைய மூன்று நாள்கள் மற்றும் விடுமுறை நாள்களில் ஆற்ற முடியாத நிலைமை. இந்தத் தினங்களில் நோயாளர்கள் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு செல்லவேண்டிய நிலைமையே வடக்கு மாகாணம் முழுவதிலும் உள்ளது. நிமோனியா போன்ற உயிர் அச்சுறுத்தல் உள்ள நோயாளர் ஒருவர் மாகாண வைத்தியசாலைக்கு வந்தாலோ அல்லது விபத்துமூலம் ஒருவர் வைத்தியசாலைக்கு வந்தாலோ மாகாண சுகாதார வைத்தியசாலைகளால் சரியான சேவைகளைவழங்கமுடியாதநிலைமை. இதைவிட, வவுனியா மாவட்டப் பொது வைத்தியசாலை, தெல்லிப்பழை ஆதாரவைத்தியசாலை போன்றவற்றில் நோயாளியின் உடலில் எந்த பாதிப்பு உள்ளது என்பதைக் கண்டறியும் சி.ரி.ஸ்கான் இயந்திரம் உள்ளது. இதனால் இந்த வைத்தியசாலையை நம்பிவருகின்ற நடுத்தர வர்க்க நோயாளி தனது உயிரைக்கூட இழக்க நேரிடும். பணபலம் படைத்த செல்வந்தர்கள் பெருமளவு பணத்தைச் செலுத்தி தனியார் வைத்தியசாலையில் சி.ரி.ஸ்கான், கதிரியக்கப் பிரதி போன்றவற்றைப் பெற்று தமக்குரிய வைத்தியத்தை மேற்கொள்வார்கள். ஆனால், பாதிக்கப்படப்போபவர்கள் சாதாரண மக்களும் நடுத்தர மக்களுமே ஆவர். இதனை நிர்வாகம் சார் அதிகாரிகள் மனிதாபிமானத்துடன் நோக்கவேண்டும்.



வடக்கு மாகாணத்திலே இரண்டாவது பெரிய வைத்தியசாலையாகிய தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் இரு கதிரியக்கவியலாளர்கள் மட்டுமே உள்ளார்கள். இங்கு பொது மருத்துவப் பகுதியில் கதிரியக்கமும் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு பகுதியில் சி.ரி.ஸ்கானும் உள்ளன. அந்த இயந்திரம் புற்றுநோயாளர்களின் சிகிச்சைக்காக வழங்கப்பட்டதென்றாலும், அதிலே சி.ரி.ஸ்கான் மேற்கொள்ளலாம் என்பதால் இயந்திரம் ஓய்வாக இருக்கின்ற நேரத்தில் 300 மீற்றர் தூரத்துக்கு மேல் உள்ள புற்றுநோய் சிகிச்சைப்பிரிவுக்கு நடந்துசென்று சி.ரி. ஸ்கான் வைத்தியசாலைக் கதிரியக்கவியலாளர்களால் மேற்கொள்ளப்படுகின்றது. இந்த வருடம் இதுவரை 600 இற்கு மேற்பட்ட சி.ரி. ஸ்கான்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தெல்லிப்பழையில் இந்த சேவை வழங்கப்படாவிட்டால் யாழ்.போதனா வைத்தியசாலைக்கே இந்த நோயாளர்கள் முன்பதிவு செய்து சென்றிருக்கவேண்டும். வவுனியா பொது வைத்தியசாலையிலும் சி.ரி. ஸ்கான் மேற்கொள்வதிலும் இதே நிலைமைதான்.



நாட்டின் 8 மாகாணங்களிலும் ஒழுங்காக சுகாதாரத்துறை இயங்குகின்ற நிலைமையில் வடக்கு மாகாணத்தில் மட்டும் பூதாகரமாக, அச்சுறுத்தல் மிகுந்த தொழிலாகிய இந்தக் கதிரியக்கவியலாளர்களின் சேவையை அவர்கள் சங்கடமின்றி வழங்குவதற்கு – அதன் பூரண பயனை சிரமங்களின்றி மக்கள் பெறுவதற்கு வடக்கின் நிர்வாகிகளாகிய ஆளுநரும் பிரதம செயலாளரும் சிந்தித்துச் செயற்படவேண்டும். சுகாதாரம் தொடர்பில் தமக்கு பூரண அறிவின்மை இருப்பின் – கதிரியக்கவியல் தொழில் பற்றிய அறிவின்மையாயின் – வைத்தியத்துறைசார்ந்த அனுபவம் மிக்க நிர்வாகிகளிடமோ அல்லது வைத்தியசாலைகளின் பணிப்பாளர்கள், அத்தியட்சகர்களிடமோ அல்லது வைத்திய நிபுணர்களி டமோ ஆலோசனை பெற்று வடக்கின் சுகாதாரத் துறையை மிளிரச் செய்வார்களாக!

காலைக்கதிர்
Kalaikkathir

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.



- செல்லத்துரை ரவீந்திரன் -

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!

## அனுபவங்களின் அரசியல்

அங்கம் - 195

பல வாசகர்கள் நேற்றைய பதிவின் பின், இனப்பிரச்சனைக்கான தீர்வு 13ஆம் திருத்தம்தானே, அதுதானே 'இருப்பது, அதைத்தானே பாதுகாத்துக் கொண்டு' அதிலிருந்து முன்னேற வேண்டும் எனப் பேசுகிறார்கள், எழுதுகிறார்கள் என கருத்து தெரிவித்தனர்.

யானையையோ, பிள்ளையாரையோ தும்புக்கையினால் தான் மக்கள் அறிந்து கொள்கிறார்கள். என்றாலும் யானையினதோ பிள்ளையாரினுடையதோ தோற்றம் அதுவல்ல.

இந்திய ஒப்பந்தம்தான் தீர்வு; 13ஆம் திருத்தம் அதன் நடைமுறையாக்கலுக்கான சட்ட விதிகள். இந்த சட்ட விதிகள் அல்லது தமிழ் மக்களுக்குத் தரப்பட வேண்டிய அதிகாரங்கள், இந்தியக் குடியரசுச் சட்டங்களில் மாநில அரசுகளுக்கு கொடுக்கப்படுவதை ஒத்திருந்தது. அதன் பிரகாரம் மாநில அரசின் அதிகாரங்கள் அந்த மாநிலத்தின் மக்கள் தேர்ந்தெடுத்த பிரதிநிதிகளிடம் இருந்தன. அந்த அதிகாரங்களை மத்திய அரசின் அதிகார வரம்புகளுக்கு அமைய நடைமுறைப்படுத்த அவர்களால் முடிந்தது.

இந்தியாவின் ஜனாதிபதி நடைமுறை அதிகாரங்கள் கொண்டவரல்லர். ஆனால், ஜே.ஆர் தனக்கு இருந்த நிறைவேற்று அதிகாரங்களைப் பாவித்து மாநில ஆளுநரை தனது அதிகார நடைமுறைப் பிரதிநிதியாக்கி, தேர்ந்தெடுக்கப்பட்ட மாகாண சபைகளை ஆளுநரின் – அதாவது ஜே. ஆரின் – நிறைவேற்று அதிகாரங்களுக்கு ஏற்ப இயங்க வேண்டிய தேவையை உருவாக்கினார். அதிகாரப் பரவலை அர்த்தபூர்வமாக நடைமுறைப்படுத்துவதில் இருந்த இப்படியான அதிகார சிக்கல்கள் தீர்க்கப்படக் கூடியவை.

ஆனால், அதற்கிடையில் விடுதலைப் புலிகளையும் தமிழ் மக்களையும் ஒப்பந்தத்தின் நடைமுறைகளுக்கு சமாளிப்பதா அல்லது ஜே.ஆரையும் ஜே.வி.பி. வன்முறைகளையும் சமாளிப்பதா என்பதில் பின்வந்த காலங்கள் உருண்டோடின.

தமிழ் மக்களின் இனப் பிரச்சினைக்காக, சிங்களத் தரப்புகளுடன் இந்தியா இணங்கிக் கொண்ட தீர்வு இந்திய ஒப்பந்தம் என்பதை வித்தியாசப்படுத்தாமல் பலரும்–ஊடகங்கள் கூட–அப்படியான கருத்தாக்கங்களை முன் வைக்கிறார்கள் என்பது எனது அபிப்பிராயம்.

உதாரணத்துக்குப் பார்த்தால் ஒப்பந்தம் ஆக்கப்பட்ட பொழுது ராஜீவ் காந்தி, பிரபாகரனுக்கு வடக்கு – கிழக்கு மாகாணங்களில் இணைப்பு, இடைக்கால அரசு என்பவை பற்றி தந்த உறுதிமொழிகள் போல, கூட்டணித் தலைவர் அமிர்தலிங்கத்துக்கும் அவை பற்றிய குறைபாடுகளை ஒட்டி பேச்சுக்கள் எழுந்த போது உறுதிகள் தந்திருந்தார். இவை பின் கடிதப் பரிமாற்றங்களாலும், இணை ஒப்பந்தங்களாகவும்



பார்க்கப்பட்டு, பிரேமதாஸாவினால் இந்தியப் படைகளின் மீள் வாங்கலுக்கானப் பேச்சுக்களில் இவை ஏற்றுக் கொண்டவையாகத் தெளிவாக்கப்பட்டன. ஆனால் விடுதலை புலிகளும் பிரேமதாஸாவும் அதை நாங்கள் பார்க்கிறோம், நீங்கள் முதலில் வெளியேறுங்கள் என்றனர்.

முள்ளின் மேல் அகப்பட்ட சேலை போல இருந்த சிக்கல், வடக்கு, கிழக்கு மாகாண சபைகளின் இணைப்பில் எந்த மாவட்டங்கள், எந்த மாகாணங்களாக அடக்கப்படும், இன விகிதாசாரத்தின் படி எப்படி அவற்றை தேர்ந்தெடுப்பது, இதனால் ஏற்படக்கூடிய மக்களிடம் தேர்வுகளின் விளைவுகள் அதனால் ஏற்படக்கூடிய வன்முறைகள் பற்றியவை எல்லாம் பேசப்பட்டன.

1981 ஆம் ஆண்டு வரை திரட்டப்பட்ட மாவட்டங்களின் இன விகிதாசாரங்களின் படி 1953 – 1981 வரையான வருடங்களில் திருகோணமலை மாவட்டத்தில் சிங்கள மக்கள் தொகை 465 வீதத்தினாலும், தமிழ் மக்களது தொகை 149 வீதத்தினாலும் அதிகரித்திருந்தது. கிழக்கு மாகாணத்தை முழுமையாக எடுத்தால் சிங்கள மக்களின் தொகை 435 வீதத்தினாலும் தமிழ் மக்களது தொகை 145 வீதத்தினாலும் அதிகரித்திருந்தன. வடமாகணத்தில் சிங்கள மக்களின் தொகை 137 வீதத்தினாலும், தமிழ் மக்களது தொகை 92 வீதத்தினாலும் அதிகரித்திருந்தது.

தமிழ் மக்கள் சிங்களப் பிரதேசங்களில் சொந்த முயற்சிகளினால் வாழ்வாதாரங்களுக்காகவோ வன்முறை காரணமாகவோ குடியேறினாலும் அவை தமிழ் மக்களின் ஆக்கிரமிப்பு என சிங்களப் பேரினவாதத்தால் பிரசாரப்படுத்தப்பட்டது.

ஆனால் உண்மை நிலை அதுவல்ல. எந்தச் சிங்கள மாவட்டத்திலும் தமிழ் மக்களது வீதாசாரம் 10 வீதம் கூட இல்லை. ஆனால் தமிழ் மக்கள் இன வீதாசாத்தில் பாரம்பரியமாக பெரும்பான்மையிலிருந்த வவுனியாவில் 16.55 வீதம், திருகோணமலையில் 33 62 வீதம், அம்பாறையில் 37 5 வீதம் என்ற வீதங்களில் கூடியிருந்தன. இப்பொழுது இருக்கும் விதாசாரங்களை மக்கள் தங்களது பக்கத்தில் இருப்பவரைப் பார்த்தே உணர்ந்து கொள்ளக் கூடும். பேச்சுக்களுக்குப் போராடும் தலைவர்களிடையே அந்தத் தகவல்கள் இருந்து அப்படியான இனவிதாசாரங்களில், வடகிழக்கின் இணைப்பை இணக்கத்தில் பெற்றுக் கொள்ள வேண்டிய தேவைகளையும் தகமைகளையும் புரிந்து இருப்பார்கள் என எண்ணுகிறேன். கூட்டணியினர் அந்த இணைப்பு 1948 ஆம் ஆண்டு சுதந்திரம் கிடைத்த பொழுது இருந்த இன விகிதாசாரத்தில் மாவட்டங்கள் மாகாணத்தில் அடக்கப்பட்டு, இணைக்கப்பட வேண்டும் என கோரினாலும், ராஜீவோடும் இந்தியத் தரப்பினரோடும் தொடர்ந்த பேச்சுக்களினால் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா நேபாளத்தில் நடந்த பிராந்திய சம்மேளனத்திற்கு சென்று வரும் வழியில் புதுடில்லியில் ராஜீவ் காந்தி பிரேதித்த 1955 ஆம் ஆண்டில் இன விகிதாசாரத்தின்படி அமல்படுத்த ஏற்றுக் கொண்டார். இந்திய ஒப்பந்தத்தின் இணையாக இது 'நேபாள இணக்கம்' என இந்தியத் தரப்புக் கருதுகிறது. ஆகவே இனப்பிரச்சினைக்கான இந்திய ஒப்பந்தம் என நாம் பார்க்கும் போது பொதுவாக ராஜீவ் காந்திக்கும், ஜே.ஆர்., பிரேமதாஸா இடையேயான கடிதப் பரிமாற்றங்களையும் அதிகாரிகளுக்கு இடையே இருந்த பேச்சுக்களில் ஏற்றுக்கொள்ளப்பட்டவற்றின் குறிப்புகள் என்றவையும் கணக்கெடுத்துக் கொள்ளப்பட வேண்டும். ஒப்பந்தத்தின் ஆக்க காலத்தில் இருந்து கூட்டணியின் இளைய நாடாளுமன்ற அங்கத்தினராலும், கட்சிக் கூட்டங்களிலிருந்து கூட்டணியுடன் ஏற்படுத்தப்பட்ட இணக்கங்களை சம்பந்தன் அறிந்து கொண்டிருப்பார். அந்த உறுதிப்பாடுகளின் படி சம்பந்தன் கூட்டுக் கட்சித் தலைவர்களை 1955ல் இருந்த மாகாணங்களின் இன விகிதாசார அடிப்படையில் தான் இணைப்பு ஏற்படுத்தப்படும் என கோர வேண்டும். அல்லாது, இன்றுள்ள இன விகிதாசார அடிப்படையிலே நடைமுறைக்காக மாகாணங்கள் இணையுமானால் தமிழ் மக்களின் வாழ்வாதாரங்களுக்கும் வாழ்வியல்களுக்கும் அப்படியான இணைப்புடன் சேர்ந்து வரும் ஜனநாயக மரபு, சிங்கள மக்களின் வாக்கு பலத்தினால் வழி விடாது. மீன்பிடிக்க போய் கருவாடு வாங்கி வந்த கதையாகத்தான் இது முடியும். ஆனால் கருவாட்டிலும் ஓர் ருசி இருக்கத்தான் செய்யும் என வாதாடினால் என்ன செய்வது?

ஒப்பந்தங்கள் ஆக்கப்பட்டதன் பின் 1987இல் தமிழ்நாட்டின் மயிலாப்பூர் அகடமியில் அவர்களது அழைப்பில் கூட்டணி தலைவராக அமிர்தலிங்கம் உரையாற்றிய போது அவர் இந்திரா காந்தியுடன் இருந்த பேச்சுக்காலங்களில் இருந்து ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்ட நாள்கள் வரையான பேச்சுக்கள் குறித்து சில யதார்த்தங்களைத் தெரிவித்தார்.

"இணக்கமான தீர்வு என நாம் போகும் போது நாங்கள் எதிர்பார்த்த நூறு வீத கோரிக்கைகளும் கிடைக்க வேண்டும் என நிர்ப் பந்திக்க முடியாது. அந்த விட்டுக் கொடுப்பிலேயே, மாநில சுயாட்சி முறையில் அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்ளலாம், அதற்கு இந்தியா உத்தரவாதம் அளிக்கின்றது என்ற நம்பிக்கையில் ஒப்பந்தத்தை ஏற்று பயணிக்கிறோம். இந்தியா, கிழக்குப் பாகிஸ்தானைப் பிரித்து ராணுவ பலத்தால் பங்களாதேஷ் தேசத்தை உருவாக்கியது போல், ஏன் தமிழ் இனத்தையும் உருவாக்கவில்லை எனப் பலர் நியாயமாக அபிப்பிராயப்படுகிறார்கள். ஆனால் அப்பொழுது பாகிஸ்தானானால் இந்தியாவை பாதித்த புவியியல் சூழ்நிலைகள் இப்போது இல்லை. தமிழ் மக்களுக்கு அனுசரணையாக இந்தியா இருந்தாலும் பிரிவினையால், நிரந்தரமான எதிரியை பிராந்தியத்தில் உண்டாக்கி, அந்த எதிரி ஊடாக பிராந்திய அதிகாரங்களுக்கு தொல்லை வருவதை விரும்பவில்லை. சில சமயங்களில் பிராந்திய அதிகாரங்கள் பாவிக்கப்பட்டாலும் இணக்கமான முறையில் தீர்வை ஏற்படுத்தி அதை முன்னின்று நடைமுறைப்படுத்தவும் இந்தியா இணங்கி கொண்டுள்ளது.

"சிங்கள மக்களினதும் அரசபடைகளினதும் வன்முறைகளால் தமிழ் மக்கள் தொடர்ச்சியாக பாதிக்கப்பட்டவர்கள். இதனால் எழுந்ததுதான் தமிழ் இளைஞர்களது ஆயுதப் போராட்டமும். வன்முறைகள் எல்லா சமுதாயங்களையும் பாதிக்கின்றன. மாகாண சபை இணைப்பு, இடம்பெயர்வுகள் என்பதால் சிங்களத் தரப்பில் இருந்து பாரிய வன்முறைகள் வரும் என்பவற்றை கணக்கெடுத்தே இந்திய அமைதிப் படையை ராஜீவ், ஜே.ஆருடன் இணைந்து தமிழ் பகுதிகளுக்கு அனுப்பினார். ஒப்பந்த அமுலாக்கத்தில் தமிழ் மக்களுக்கு இது மிகவும் நன்மையானது என எனது அரசியல் அனுபவத்திலிருந்து கருதுகிறேன்

"1985 இலும், பின்பு மாநாட்டு நேரங்களிலும் இந்தியா ஈடுபட்டு தமிழ் விடுதலைக் குழுக்கள் இடையேயும் ஸ்ரீலங்கா ஆயுதப் படையினரிடம் போன்றொருத்த ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்தி இருந்தது.

"இதனைக் கண்காணிக்க இந்திய படையினரை அமர்த்த வேண்டுமென நாங்கள் கோரி இருந்தோம் ஆனால் ஜே.ஆர். அதற்கு இணங்கவில்லை. அப்படியான கண்காணிப்பு நடந்திருப்பின், அந்தக் காலத்தில் நடந்த எவ்வளவு வன்முறைகளும் உயிரிழப்புக்களும் தவிர்க்கப்பட்டு இருக்கலாம்.

"ஆனால் இம்முறை ஸ்ரீலங்கா ராணுவம் தரக்கூடிய சிக்கல்களை கணக்கெடுத்து, ராஜீவ் அந்தப் படைகளை முகாமிற்குள் அடக்க, ஜே.யாருடன் இணைந்து இந்தியப் படைகளை கண்காணிப்புக்கு அனுப்பினார். இவை இந்த இனப் பிரச்சினையின் சிக்கல்களில் வரவேற்கத் தக்கதே. அது தமிழ் மக்களுக்கு பாதுகாப்பு தருமென நம்புகிறோம்."

நோக்கங்கள் எவையானாலும் மாற்றங்கள் தமிழ் மக்கள் தமக்கு ஒரு விதி தாம் சமைப்போம் என நடத்தியதே.

(வளரும்....)

### தைப்பொங்கலுடன் 5 ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாதங்களுக்கு மஹவயிலிருந்து யாழ்ப்பாணம் வரையிலான ரயில் சேவை நிறுத்தப்படும் என போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் பந்துல குணவர்தனா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் நேற்று நாடாளுமன்றத்தில் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

### இலங்கைக்குக் கடத்த ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஓர் காரில் எடுத்து வரப்பட்டு இலங்கைக்கு கடத்த முயன்ற சமயம் மரையன் பொலிஸாரினால் பெரும் அளவிலான ஒருவகை போதைப் பொருள் நேற்றுப் பிடிக்கப்பட்டுள்ளது.

சுமார் 365 கிலோ எடை கொண்ட இந்தப் போதைப் பொருள் கொக்கேயின் ரகத்தைச் சேர்ந்ததாக இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகின்றது.

20 லீற்றர் அளவுள்ள முப்பது குடிதண்ணீர்க் கான்களில் அடைக்கப்பட்ட நிலையில் இவை மீட்கப்பட்டுள்ளன. நாட்டுப் படகு மூலமே இலங்கைக்கு கடத்த முற்பட்ட வாகனத்தின் சாரதி மற்றும் படகோட்டி என இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட குடிதண்ணீர்க் கான்களில் இருந்தவை விவசாய உரம் என ஆரம்பத்தில் கருதப்பட்ட போதும் இராமேஸ்வரம் மற்றும் மதுரை ஆகிய இடங்களில் உள்ள ஆய்வுகூடங்களில் மேற்கொள்ளப்பட் பூர்வாங்கப் பரிசோதனைகளில் அவற்றில் போதைப் பொருள் இருப்பது கண்டறியப்பட்டதனால் இவற்றின் மாதிரிகள் இப்போது சோதனைக்கு சென்னைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

### மக்களின் விருப்பத்திற்கு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை அரசாங்கத்தின் மறைமுக ஆதரவுடன் நவம்பர் 25, கையொப்பமிட இரகசிய ஏற்பாடு செய்யப்பட்டது என்பதை ஊடகங்களில் அறிந்து அதிர்ச்சியடைந்தோம்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அபிவிருத்தித் திட்டங்கள் என்ற போர்வையில் எங்களின் நிலத்தை அபகரிக்கும் சீனாவின் மறைமுக நிகழ்ச்சி நிரலை அறிந்து புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்கு துணிச்சலாக மறுத்த யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் பேராசிரியர் சிவக்கொழுந்து சிறீசற்குணராஜாவுக்கு நன்றிகளைத் தெரிவித்து கொள்கிறோம்.

ஐ.நா சபையின் அறிக்கையின் பிரகாரம், இனவழிப்பு யுத்தத்தின் இறுதி ஆறு மாத காலப் பகுதியில் மட்டும் 70 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழர்கள் கொல்லப்பட்டமையோடு நூற்றுக்கணக்கான தமிழ்ப் பெண்களும் சிறுமிகளும் சிறிலங்கா ஆயுத படையினரால் பலாத்காரம் செய்யப்பட்டனர். குழந்தைகள் உட்பட ஆயிரக்கணக்கான தமிழர்கள் காணாமல் ஆக்கப்பட்டனர்.

சீனா, அனைத்தையும் நன்றாக அறிந்திருந்தும் தமிழர்களை தொடர்ந்து அவமானப்படுத்துவதையும், சர்வதேச அரங்கில் தமிழர்களுக்கு நீதி கிடைக்காமல் தடுப்பதையும் வழக்கமாக கொண்டதுடன், போர்க்குற்றவாளிகளை ஆதரித்தும் இலங்கையை கடன் பொறியில் சிக்க வைத்து அச்சுறுத்தியும், இலங்கையைக் கைப்பற்றும் அதன் மறைக்கப்பட்ட நிகழ்ச்சி நிரலை முன்னெடுத்து வருகிறது.

தமிழர் விரோத மனப்பான்மை கொண்ட சீனா வடக்கிலும் கிழக்கிலும் தனது செல்வாக்கை அதிகரிக்கச் செய்யும் தீய நோக்கத்துடன் எமது கடலையும் நிலத்தையும் அபகரித்து, எமது பாரம்பரிய மண்ணில் எம்மை அகதிகளாக்கி இனப் படுகொலை செய்யும் முயற்சிகளை நாம் ஏற்கனவே கண்டித்திருந்தோம்.

தீங்கு விளைவிக்கும் கடலட்டை பண்ணைகள் என்ற போர்வையில் சீனா நேரடியாகவும் மறைமுகமாகவும் ஏற்கனவே எமது கடலின் பெரும்பகுதியை ஆக்கிரமித்து, எமது மீனவர்களிடையே பிளவை உருவாக்கியுள்ளது.

தற்போது சீனா வடக்கு மற்றும் கிழக்கிலுள்ள வளமான விவசாய நிலங்களை, தமது நாட்டில் பத்து ஆண்டுகளில் ஏற்பட இருக்கும் மிக கடுமையான உணவு பஞ்சத்தை சமாளிக்கும் பொருட்டு தீய எண்ணத்துடன் கைப்பற்ற முயற்சி செய்து கொண்டிருக்கிறது. சீனா, இலங்கைக்கு தீங்கு விளைவிக்கும் பாக்ரீயாக்களுடன் கூடிய மலக் கழிவுகளை உரமாக வழங்கியதாகவும், இலங்கைக்கு மில்லியன் கணக்கான ரூபாய்களை செலுத்துமாறு நிர்ப்பந்தித்ததாகவும் கூறப்படுகிறது. சீனாவில் வரவிருக்கும் உணவு நெருக்கடியை சமாளிக்க எமது வளமான விவசாய நிலங்களை சீனா எப்படி கைப்பற்றி எம்மை அடிமையாக்கும் என்பதற்கு இது ஒரு சிறந்த உதாரணம்.

வெளிப்படைத்தன்மையற்ற மற்றும் சாத்தியமற்ற சீனக் கடன்கள் மூலம் இலங்கை தற்போதைய நிலைமைக்கு வந்துள்ளது என்பது தெளிவாகிறது. இலங்கையின் சர்வதேச நாணய நிதியத்தின் திட்டங்களுக்கு ஜப்பானும், இந்தியாவும் ஆதரவளித்துள்ள போதிலும், கடன்களை பரிசீலிக்கும் தற்போதைய பேச்சு வார்த்தைகளில் கூட சீனாவின் மறுநிதியளிப்பு திட்டத்தில் தொடர்ந்து நெருக்கடி தந்து வருவது, இலங்கையில் மீண்டும் பேரழிவை ஏற்படுத்தும் சீனாவின் மறைமுக நிகழ்ச்சி நிரல் இலங்கையின் சமீபத்திய வரலாற்றிலிருந்து தெளிவாகக் அறிய முடிகிறது.

சீனாவின் அணுகுமுறையின் அடிப்படையில், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள வளமான விவசாய நிலங்களையும் கடற்பரப்பையும் சீனாவுக்கு விற்பதற்கு இலங்கை அரசாங்கம் ஏற்கனவே சீனாவுடன் இரகசிய ஒப்பந்தம் செய்து கொண்டதாக நாங்கள் சந்தேகிக்கிறோம். எமது நிலங்களையும் கடலையும் மக்களின் விருப்பத்திற்கு மாறாக சீனாவிற்கு விற்கப் பல புரிந்துணர்வு ஒப்பந்தங்களை அரசாங்கம் செய்து வருகிறது.

யாழ். பல்கலைக்கழக மாணவர்களாகிய நாங்கள், அண்மையில் சீன பல்கலைக்கழகத்துடன் கைச்சாத்திட இருந்த ஒப்பந்தத்தை இரத்து செய்த துணை வேந்தர் பேராசிரியர் சிவக்கொழுந்து சிறீசற்குணராஜா அவர்களுக்கு மீண்டும் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன், அரசியல் நிர்ப்பந்தத்திற்காக எமது நிலத்தையும் கடலையும் வேறு நாடுகளுக்கு விற்க வேண்டாம் என இலங்கை அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுப்பதுடன், நமது கடலையும், நிலத்தையும் காப்பாற்ற குரல் கொடுக்குமாறு சிவில் சமூகங்கள் மற்றும் அனைத்து மக்களிடமும் வேண்டுகோள் விடுக்கின்றோம். இந்த கடமையிலிருந்து தவறுகின்ற பட்சத்தில், எதிர்காலத்தில் நாம் அனைவரும் எம்முடைய சொந்த நாட்டிலேயே அகதிகளாக்கப்படுவோம். - என்றுள்ளது.

## லிந்துலையில் 17 மாணவருக்கு குளவிக்கொட்டு

நுவரெலியா கல்வி வலயத்திற்குட்பட்ட லிந்துலை சரஸ்வதி ரோயல் கல்லூரி மாணவர்கள் 17 பேர் நேற்று (திங்கட்கிழமை) குளவி கொட்டுக்கு இலக்காகியுள்ளனர்.

பாடசாலையில் இவர்கள் இருந்த வேளையில் அப்பகுதியில் இருந்த மரத்தில் காணப்பட்ட குளவிக் கூடு திடீர் எனக் கலைந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

ஆரம்பப் பிரிவைச் சேர்ந்த ஆண் மற்றும் பெண் பிள்ளைகளே குளவிக் கொட்டுக்கு இலக்கானார்கள் எனத் தெரிவிக்கப்பட்டது.

பாதிக்கப்பட்ட மாணவர்கள் லிந்துலை பிரதேச வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

## கோட்டாவின் சூறையாடப்பட்ட அலுவலகத்தின் படமும் தெரிவு



2022 ஆம் ஆண்டின் சிறந்த 100 படங்களில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் சூறையாடப்பட்ட அலுவலகத்தின் படமும் சேர்க்கப்பட்டுள்ளது.

இந்தப் படம் 2022 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 15 ஆம் திகதி அன்று ஆர்ப்பாட்டக்காரர்களினால் ஜனாதிபதி மாளிகையை கைப்பற்றப்பட்ட பின்னர் அபிகே சின்னப்பா எடுக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

## இரு பார்வையாளரைப் புரட்டி எடுத்த யாழ். ஆஸ்பத்திரிப் பாதுகாவலர்கள்!

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் நோயாளியைப் பார்க்க சென்ற இருவரை வைத்தியசாலை பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் குழுவாக இணைந்து நையப்புடைத்திருக்கின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்திலும் இது தொடர்பாக முறைப்பாடொன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

சனிக்கிழமை மதியம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட தமது தாயாரை பார்ப்பதற்காக இருவர் வைத்தியசாலைக்கு சென்றுள்ளனர். இதன் போது ஒருவர் மட்டுமே வைத்தியசாலை விடுதிக்குள் சென்று நோயாளரை பார்வையிட முடியும் என பாதுகாப்பு உத்தியோகத்தரினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"ஏன் பாரபட்சமாக நடக்கிறீர்கள் வேறு நோயாளியைப் பார்ப்பதற்கு ஒரே நேரத்தில் சில பார்வையாளர்களை அனுமதித்தீர்களே..!" எனத் தெரிவித்து நோயாளியை பார்க்கச் சென்றவர் பாதுகாப்பு உத்தியோகத்தரிடம் கேள்வி எழுப்பியுள்ளார்.

இதன்போது இருதரப்புக்கும் வாக்குவாதம் ஏற்படவே ஒன்றுகூடிய வைத்தியசாலை பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் இருவர் மீதும் சரமாரியாக தாக்குதல் நடத்தியுள்ளனர்.

தாக்குதலில் காயமடைந்த தபாலக ஊழியர் யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையின் பணிப்பாளரைத் தொடர்பு கொண்டு கேட்டபோது இந்த விடயம் தொடர்பில் விசாரணை நடத்தப்படும் என்றார். இது தொடர்பாக யாழ்ப்பாண பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## சஜித்தைப் பிரதமராக்குமாறு அவரின் மனைவி கோட்டாவைக் கோரினார் என்கிறார் டயானா!




கோட்டாபய ஜனாதிபதியாக இருந்த போது தனது கணவருக்கு பிரதமர் பதவியை வழங்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவின் மனைவி ஜலானி பிரேமதாச, தொலைபேசியில் தொடர்பு கொண்டு கேட்டதாக சுற்றுலா இராஜாங்க அமைச்சர் டயானா கமகே இன்று நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் மட்டுமல்ல, அவரது மனைவியும் கோட்டாபய ராஜபக்ஷவை அழைத்து சஜித்தை பிரதமராக்க வாய்ப்பளிக்குமாறு கோரி இருந்தார். கோட்டாபய ராஜபக்ஷ இதை எங்களுடன் பகிர்ந்து கொண்டார் என்று டயானா கூறினார்.

சஜித் தொடர்ந்தும் போராட்டங்களை நடத்தினால் மக்கள் வீதியில் இறங்கி அடிப்பார்கள் என்றும் இந்த நாட்டைக் காப்பாற்றும் முயற்சிகளை நாசப்படுத்துவதை நிறுத்துங்கள் என்றும் டயானா நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

## ஆசிரிய மாணவர் ஆறு பேருக்கு விளக்கமறியல்

ருகுணு தேசியக் கல்வி க்கல்லூரியில் இடம்பெற்ற மோதல் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட 6 மாணவர்கள் நாளை 30 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேகத்திற்குரிய ஏழு மாணவர்கள் நேற்று காலி நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டமையை அடுத்து, அவர்களில் ஒருவர் மட்டும் பிணையில் விடுவிக்கப்பட்டார்..

சம்பவத்தில் காயமடைந்த 12 மாணவர்கள் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.



காலைக்கதிர் Kalaikkathir

# இலங்கையின் தேசிய விளையாட்டுப் போட்டிகளில் பெரும்பான்மை சமூகம் மாத்திரமே உள்ளடக்கம்!

## விநோநோகராதலிங்கம் குற்றச்சாட்டு



சர்வதேச மட்டத்திலான போட்டிகளின் போது தமிழ், முஸ்லிம் இளைஞர், யுவதிகள் பங்குபற்றும் வாய்ப்பு திட்டமிட்ட வகையில் தவிர்க்கப்படுகிறது.

தேசிய போட்டிகள் பெரும்பான்மை சமூகத்தினரை மாத்திரம் உள்ளடக்கியதாகக் காணப்படுகிறது, இந்நிலைமை மாற்றமடைய வேண்டும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் விநோநோகராதலிங்கம் தெரிவித்தார்.

இளைஞர்கள் போதையின் பாதையில் செல்கிறார்கள். விளையாட்டுத்துறையை மேம்படுத்தினால் இளைஞர்,யுவதிகள் விளையாட்டுத்துறையில் அதிக நாட்டம் செலுத்துவார்கள். விளையாட்டு வீரர்களை ஊக்கப்படுத்த அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் சபையில் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற 2023 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தில் பொதுநிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி,விளையாட்டுத்துறை, இளைஞர் விவகாரத்துறை அமைச்சு ஆகியவற்றுக்கான நிதி ஒதுக்கீடுகள் தொடர்பான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

மன்னார் மாவட்டத்துக்கு என பொது மைதானத்தை அமைப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு, முழுமைப்படுத்தப்படாத நிலையில் உள்ளது.

தொல்பொருள் திணைக்களத்தின் தலையீட்டுடன் ஆரம்பத்தில் நிர்மாணிப்பு பணிகள் இடைநிறுத்தப்பட்டன, தற்போது உரிய காரணிகள் இல்லாமல் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

மன்னார் மாவட்டம் உதைபந்தாட்டத்துக்கு பிரசித்தி பெற்றுள்ளது. விளையாட்டு வீரர்களுக்கு உரிய மைதானம் இல்லாத காரணத்தால் அந்தப் பிரதேச மக்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். ஆகவே குறித்த மைதானம் விரைவாக முழுமைப்படுத்தப்பட்டு மக்களிடம் கையளிக்கப்படவேண்டும் என்பதை வலியுறுத்துகிறேன்.

அபிவிருத்தி தொடர்பில் வரவு–செலவுத் திட்டத்தில் அழகாக குறிப்பிடப்பட்டுள்ள போதும் அபிவிருத்தி பணிகள் முறையாக முன்னெடுக்கப்படுவதில்லை. மாவட்ட அபிவிருத்திகளின் போது பாரபட்சம் காட்டப்படுகிறது.

வவுனியா மாவட்டத்தில் பொது மைதானம் இல்லை. அந்தப் பிரதேச இளைஞர்களுக்கு என்று வசதிகளுடனான மைதானம் ஒன்று இல்லை. ஆகவே, மாவட்ட அடிப்படையில் திட்டமிட்ட வகையில் புறக்கணிப்புக்கள் இடம்பெறுகின்றன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் பொதுமைதானத்தை அமைப்பதற்கு இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

வெறும் இழுத்தடிப்புக்கள் மாத்திரம் இடம்பெறுகின்றன. எடுக்கப்பட்ட தீர்மானங்கள் திட்டமிட்ட வகையில் தவிர்க்கப்படுகின்றன. வடமாகாணத்துக்கு என சகல வசதிகளுடன் மைதானம் என்பதொன்று இல்லை.

சர்வதேச மட்டத்திலான போட்டிகளின் போது தமிழ், முஸ்லிம் இளைஞர், யுவதிகள் பங்குபற்றும் வாய்ப்பு திட்டமிட்ட வகையில் தவிர்க்கப்படுகிறது.

தேசிய போட்டிகள் பெரும்பான்மை சமூகத்தினரை மாத்திரம் உள்ளடக்கியதாகக் காணப்படுகிறது, இந்நிலைமை மாற்றமடைய வேண்டும்.

இளைஞர்கள் போதையின் பாதையில் செல்கிறார்கள். விளையாட்டுத்துறையை மேம்படுத்தினால் இளைஞர், யுவதிகள் விளையாட்டுத்துறையில் அதிக நாட்டம் செலுத் துவார்கள். விளையாட்டு வீரர்களை ஊக்கப்படுத்த அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வடக்கு மாகாணத்தில் போதைப்பொருள் பாவனை தீவிரமடைந்து செல்கிறது, போதைப்பொருள் பாவனைக்கு இளைஞர்கள் சீரழிந்து செல்கிறார்கள். இதற்கு ஒரு தீர்வு காணாவிட்டால் நாட்டுக்கு எதிர்காலம் என்பதொன்று கிடையாது.

ஆகவே போதைப்பொருள் பாவனை தொடர்பில் அரசாங்கம் துரிதமாகச் செயற்பட வேண்டும். வடக்கு மாகாணத்தில் போதைப்பொருள் ஒழிப்பு விடயத்தில் பொலிஸார் மந்தகரமாகச் செயற்படுகிறார்கள். ஆகவே, போதைப்பொருள் ஒழிப்பு தொடர்பில் அரசாங்கம் பொறுப்புடன் செயற்பட வேண்டும். – என்றார்.

# பல்கலை மாணவர்கள் குறித்து கணக்கெடுப்பு!

## கல்வி அமைச்சு அறிவிப்பு

பல்கலைக்கழக மாணவர்கள் குறித்த காலத்துக்குள் பட்டம் பெறாமல் இருந்தால் அவர்களை பல்கலைக்கழகங்களில் இருந்து நீக்குவது தொடர்பான சட்டமூலமொன்றை நாடாளுமன்றத்துக்கு கொண்டுவர கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இது தொடர்பில் உயர்கல்வி இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன் தெரிவிக்கையில் –

சில மாணவர்கள் பல்கலைக்கழக விடுதிகளில் தங்கி 9 முதல் 10 வருடங்கள் வரை பரீட்சைக்குத் தோற்றாமல் அரசியல் பணியை மேற்கொள்வதைக் கருத்தில் கொண்டே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய விடுதிகளில் தங்கியுள்ள மாணவர்களின் கணக்கெடுப்பை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அதற்கு பல்கலைக்கழக வேந்தர்களின் உதவிகளையும் பெறவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

# வவுனியா புதுக்குளம் மகா வித்தியாலயத்தில் 7 மாணவர்கள் 9 ஏ சித்தி பெற்று சாதனை!

வவுனியா புதுக்குளம் மகா வித்தியாலயத்தில் 7 மாணவர்கள் 9 ஏ சித்திகளைப் பெற்று சாதனை படைத்துள்ளனர்.

வெளியான க.பொ.த சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் வவுனியா புதுக்குளம் மகா வித்தியாலய மாணவர்கள் 9 ஏ சித்திகளை பெற்றுள்ளனர்.

இதன்படி ரமேஷ் தனுஷ், நந்தகுமார் லிதுசன், வருண்யா கணேசநாதன், டனுக்ஷி விஸ்வநாதன், ரஸ்மினா ஜேசுராசா, கிருஷாலினி கிருஷ்ணகுமார், கிநோஜி சேகர் ஆகிய 7 மாணவர்களே இவ்வாறு 9 ஏ சித்திகளைப் பெற்றுள்ளனர்.

இதேவேளை பாடசாலையின் பெறுபேறுகளின் அடிப்படையில் 7 மாணவர்கள் 9 ஏ சித்திகளையும் 3 மாணவர்கள் 8 ஏ, பி சித்தியையும் பெற்றதோடு 1 மாணவர் 7 ஏ 2 பி சித்தியையும் 2 மாணவர்கள் 6ஏபி2சி சித்திகளையும் பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மது பாவனை 30 வீதம் குறைவு வருமானம் 20 வீதம் அதிகரிப்பு!

நாட்டில் மது பாவனை குறைந்துள்ள போதிலும் கலால் திணைக்களத்தின் வருமானம் அதிகரித்துள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

மதுபான போத்தல்களுக்கு பாதுகாப்பு ஸ்டிக்கர் ஒட்டும் செயன்முறை அறிமுகம் செய்தமையைத் தொடர்ந்து வருமானம் அதிகரித்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

2021 ஆம் ஆண்டின் இதே காலப் பகுதியுடன் ஒப்பிடுகையில், ஆண்டின் முதல் 10 மாதங்களில், வருமானம் 20 வீதத்தால் அதிகரித்துள்ளதாக அவர் உறுதிப்படுத்தியுள்ளார்.

தரவுகளின்படி, பல்வேறு காரணங்களால் மதுபான தேவை சுமார் 30 வீதத்தால் குறைந்துள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஜனவரி முதல் நாட்டில் உரிமம் பெற்ற மதுபான உற்பத்தி நிலையங்கள் பாதுகாப்பு ஸ்டிக்கர்களை ஒட்டும் பணிகள் ஆரம்பிக்கப்படும் என கலால் திணைக்களம் கூறியுள்ளது. இதன் மூலம் மதுபானங்கள் மீது விதிக்கப்படும் வரிகளை அரசாங்கம் எவ் வித முரண்பாடுகளும் இன்றி வசூலிக்க முடியும் என அந்தத் திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளர் கபில குமாரசிங்க தெரிவித்துள்ளார்.

# தீர்மானங்களை எடுத்திருக்க வேண்டியவன் நான் அல்லன் முன்னாள் ஜனாதிபதியும் அவரது அமைச்சரவையுமே ஆகும்!

## முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் கப்ரால் குற்றச்சாட்டு



நாடு எதிர்காலத்தில் பாரிய பொருளாதார நெருக்கடிகளை எதிர்நோக்கும் என்று தெரிந்திருந்தும் அதற்கு முன்கூட்டியே உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் உரிய காலப்பகுதியில் சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்ளவில்லை என்றும் சிலர் என் மீது சாடுகிறார்கள்.

இருப்பினும் சர்வதேச நாணய நிதியத்திடம் செல்வது போன்ற சில தீர்மானங்களை எடுத்திருக்கவேண்டியது நான் அல்லன். மேலும் அதனை முறையாக முன்னாள் ஜனாதிபதி மற்றும் அவரின் அமைச்சரவையே தீர்மானித்திருக்க வேண்டும் என்று மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் குறிப்பிட்டுள்ளார்.

ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில் –

நாடு பொருளாதார நெருக்கடிகளை எதிர்நோக்கும் என்று தெரிந்திருந்தும் ஏன் சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்புகளை பெற்றுக்கொள்ளவில்லை என்று பலரும் என்னிடம் கேட்கிறார்கள்.

இந்தத் தீர்மானத்தை என்னால் எடுக்க முடியாது. அதை முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் அமைச்சரவையே எடுத்திருக்க வேண்டும்.

தற்போது சிலர் உரிய காலப்பகுதியில் மத்திய வங்கியின் ஆளுநர் கப்ரால் சர்வதேச நாணய நிதியத்தை நாடவில்லை என்று கூறி அந்தப் பழியை என் மீது சுமத்தப் பார்க்கிறார்கள்.

மேலும் என்னுடைய காலப்பகுதியில் 12 வீதமாக காணப்பட்ட வட்டி வீதங்கள் தற்போது 33, 34 மற்றும் 40 வீதங்களாக அதிகரிக்கப்பட்டுள்ளன. வட்டி வீதங்கள் இவ்வாறு காணப்படும் போது யாருக்கு வர்த்தகத்தை மேற்கொள்ள முடியும்.

இந்தக் கொள்கை நாட்டுக்கு பொருத்தம் என்றால் அல்லது நாட்டின் பொருளாதாரம் பழைய நிலைமைக்கு திரும்பும் என்று கருதினால் மேற்கொள்ளுங்கள்.

அதன் ஊடாக போராட்டங்கள் வெடிக்காது என்று கருதினால் அது தொடர்பிலும் தேடிப்பாருங்கள். நான் எழுதிய புத்தகத்தில் இதனைப் பற்றி விரிவாகக் குறிப்பிட்டு இருக்கிறேன். சிலர் நான் எழுதிய புத்தகம் தொடர் பில் விமர்சனங்களை முன்வைத்துள்ளதோடு அதனை படிக்கும் போது நகைச்சுவையாக இருக்கிறது என்கிறார்கள். பரவா யில்லை. அதை வைத்து அவர்கள் மகிழ்ச்சியடையட்டும். முதலில் புத்தகத்தை படியுங்கள். பின்னர் கருத்துக்களைக் கூறுங்கள்.

நான் மத்திய வங்கி ஆளுநர் பதவியிலிருந்து விலகுவதற்கு தீர்மானித்தேன். ஆனால் அமைச்சரவை பதவி விலகியது. இருப்பினும் ஜனாதிபதிக்கு சந்தர்ப்பம் வழங்க வேண்டும் என்று கருதி மத்திய வங்கியின் புதிய ஆளுநர் ஒருவரைத் தெரிவு செய்ய வேண்டும் என்று கருதினால் தெரிவு செய்யுமாறு ஜனாதிபதிக்குக் கூறினேன். ஆனால் நான் நாட்டை விட்டு தப்பிச் செல்ல தீர்மானிக்கவில்லை. – என்றார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 29.11.2022இல் வெளியிடப்பெற்றது.